உ

கடவுள்துணை.

மதுரைவீரசுவாமி கதை.

காப்பு.

துதியும்வீரமுஞ் சொல்லும்நற்கீர்த்தியும்
அதிகவித்தையு மாண்மையுந்தாணுறும்
மதுரைவீரன்றன் மாகதையைவாழ்த்திட
கதிர்கொள்சித்தி விநாயகன்காப்பரோ

பாயிரம்.

வெண்செந்துறை.

சித்திவிநாயகர்தஞ் செய்யபதம்போற்றி
முத்தியளிக்கு முருகர்பதம்போற்றி
சொக்கர்திருவடியைத் தொழுதுமிகப்போற்றி
தக்கதிருமாலின் தாட்டாமரைபோற்றி
அங்கயற்கண்ணம்மை யிளம்பொற்பதம்போற்றி
மர்‌கையிலக்குமியின் மலர்பாதந்தான்போற்றி
அ... ருதமிழாசான் திருவடியைத்தான்போற்றி
வந்து... வாணி மலர்ப்பாதந்தான்போற்றி
சிந்தை... டியை வாழ்த்திமிகப்போற்றி
பல்லாயி... மதி...ர்தம் மன்னுபதம்போற்றி
இல்லார்ப...ல்ப...ர் செம்பொன்பதம்போற்றி
காசிவிசு...குங் ...பயன்யுடனேதான்போற்றி
ஆசையுட...ர்மன்ன துங்கப்பதம்போற்றி
மன்னர்பு...யாழும்... தொண்டரடிபோற்றி
சந்நதிவீ...வர்பலால் பானுவைபோல்விளங்கும்
அண்ட...த்தளா...ல்செ...களதிவீரன்காதைசொல்வேன்
...ன்...

நா[illegible]டுச்சிறப்பு.

மாதமும்மாரி வளங்கும்வள நாடு
காதமணம்வீசுங் கற்பகஞ்சேர் நன்னாடு
கரும்பின்கணுக்கள் முகத்தைக் காட்டுமெகா நாடு
விரும்பியறம்வளர்க்கும் மேலான நன்னாடு
முப்போகம்விளையு மூதோர்வாழ்நன்னாடு
எப்புறமுங்கங்கை யிலங்குந்திருநாடு
நவதானியம்விளையும் நல்லவள நாடு
தவமறையோர்மாமுனிவர் தங்கும்வள நாடு
தாமரைப்பொய்கைகளும் தண்மலர்சேர்வாவிகளும்
ஆமைபுலாவு மழகானகேணிகளும்
பொன்னுமணிகொளிக்கும் புண்ணியவாறுகளும்
மன்னுந்தாளம் வழங்கியவோடைகளும்
சங்குதவழ்ந்துலவுந் தாழ்வில்லா நஞ்சைகளும்
எங்குமணிவிளையு மெழிலான புஞ்சைகளும்
பாக்குமரச்சோலைகளும் பண்மலர்ப்பூச்சோலைகளும்
தேக்குமாக்காவிகளுஞ் செங்கரும்பூச்சோலைகளும்
சண்பப்பூநந்தவனம் தானேமிகுந்தவனம்
விண்ணுலவுதோப்புகளும் வீறுகனித்தோப்புகளும்
மல்லிகைப்பூபந்திகளும் மருக்கொழுந்தின்பந்திகளும்
முல்லைமலர்பந்திகளும் மூக்கனிமாம்பந்திகளும்
வானத்தளாவி நிற்க வைத்திடுநெற்பொருளும்
தானங்கொடுக்கவைத்த தாழ்வில்லாக்கள[illegible]
காமதேனுக்குநிகர் கணக்கில்லாப்பால்ப[illegible]
சேமமிகுவாடுகளும் திரளானமாடுகளு[illegible]
பசித்தோரிளைப்பாரப் பாங்கானசத்தி[illegible]
பொசித்தோர்க்குசம்போகம் பொருந்[illegible]
ஆடையில்லார்க்காடை யளித்துவரு[illegible]
வாடைபனி நீர்புனுகு வழங்கிவருஞ்[illegible]
வேதியர்க்குவேதம் விளங்குமலைச்சா[illegible]
சாதிக்குச்சாதி தங்குமாச்சாலைகளு[illegible]

குயிலோசைமிஞ்சுங் குறைவில்லாமாந்தோப்பும்
மயிலாடிநிற்கவாய்த்த மாபலாத்தோப்புகளும்
அன்னங்குலாவு மாவிந்தபூந்தடமும்
வனக்கிளிகள் கொஞ்சும் வளமானநல்மாமும்
இன்னவளமிகுந்த வெழிற்காசிநன்னாடு
தன்னையுரைக்கச் சேடன்றன்னாலுமாகாதே

மலைவளம்.

வாரணிவாசியைச்சூழ் மலைவளத்தைச்சொல்லுகிறேன்
ஆரணிமாமுனிவ ரணியணியாய்த்தவமிருப்பார்
காட்டுப்பசுவுங் கடுபுலியுங்கலந்திருக்கும்
நாட்டுப்பசுவோடு நட்பாய்ப்புலிகுலாவும்
பருந்துபைங்கிளியுமொரு பஞ்சரத்திலேவாழும் [ளும்
பொருந்தானைவாயிலெலி போய்புகுந்துபள்ளிகொள்
பச்சோந்தியும்மயிலும் பட்சமுடன்வாழ்ந்திருக்கும்
கெச்சையும்ஓனாயுஞ் செருக்குடனேகூடிநிற்கும்
சிங்கமும்யானையுஞ் சேர்ந்துவிளையாடிநிற்கும்
பொங்காவுமந்திகளும் பொருந்தியுறவாயிருக்கும்
இந்தவளமிகுந்த வெழில்காசிமாமலையைக்
கந்தனதுவாயாலுங் கட்டுரைக்கமிக்கரிதே

நகரச்சிறப்பு.

அ...
வந்...யார்வாழுங் காசியெனுமாநகரம்
சிந்தை...ந்திலங்குந் தெய்வீகமாநகரம்
பல்லாயி...மதில்சூழ்ந்த சிங்காரமாநகரம்
இல்லார்ப...ல்மாடகூட மமைந்திருக்குமாநகரம்
காசிவிசு...ருகுங் குலவுந்திருநகரம்
ஆசையுட...ர்மன்னர் மன்னுந்திருநகரம்
மன்னர்பு...யாழும்முடி யரசர்வாழ்வீதிகளும்
சந்நிதிவீ...வர்பலர் சேர்ந்துவாழ்வீதிகளும்
...ல்கொடுக்கும் வேளாளர்வீதிகளும்
அண்டத்தளா...ன்னீர் தான்விற்போர்வீதிகளும்

சாதகந்தான்குறிக்குஞ் சாஸ்திரிமார்வீதிகளும்
கோலமணிவிளக்குங் குஞ்சிலியர்வீதிகளும்
வேலைப்பழிக்கும்விழி வேசியர்வாழ்வீதிகளும்
கோடிகுதிரையணி குறித்திருக்குஞ்சாலைகளும்
ஆடிவருங்குதிரை யணியிருக்குஞ்சாலைகளும்
கடையுங்கடைத்தெருவுங் கனமானமாடங்களும்
கோடைதருஞ்செம்பொற் கொட்டிவைத்தகூடங்களும்
வீதிக்குவீதி விளங்குஞ்சிவாலயமும்
நீதிவழிவாதநெறிமன்ன ராலயமும்
மன்னர்க்குநன்மதில்சொல் மந்திரிமார்மாளிகையும்
அன்னங்கொடையளிக்கும் அழகானமாளிகையும்
எழுநிலைமாடங்களு மெழிலானகூடங்களும்
தாழுமகழிகளுந் தங்கத்தார்கோட்டைகளும்
போர்வீரரெப்புறமும் புடைசூழுங்காவல்களும்
தேர்வீரர்வாள்வீரர் திக்கெட்டும்காவல்களும்
வாளுறையில்வையாத வலுவீரர்காவல்களும்
தோள்கொட்டிதட்டிநிற்குந் துடிசூரர்காவல்களும்
கற்பில்வழுவாத கன்னியர்கூட்டங்களும்
அன்பிற்குறையாத அடியார்கள்கூட்டங்களும்
சன்மார்க்கம்நீங்காத சற்குணர்கூட்டங்களும்
துன்மார்க்கமில்லாத துரைமக்கள்கூட்டங்களும்
பந்துமுலைமாதர்பலர் பந்தடிக்குமேடைகளும்
இந்துநுகர்பெண்கூடி யிளைப்பாறுமேடைகளு
கல்விபயிலுங் கனமானசங்கங்களும்
செல்வர்மகிழ்ந்து செருக்குறுநற்சங்கங்களும்
மூலைக்குமூலை முத்துக்களஞ்சியமும்
சாலைக்குச்சாலை தங்கக்களஞ்சியமும்
வீடுகளெங்குங் விளங்குந்திருமணமும்
நாடுஞ்சிறுவர்கட்கு நல்லதிருமணமும்
மாணிக்கத்தாலிழைத்த மன்னர்மணிம

ஆணிப்பொன்னாலமைத்த ஆஸ்தானமண்டபமும்
செண்டுமுலையாராடுந் தெய்வதிருச்சபையும்
வண்டுவிழியாராடு மன்னர்திருச்சபையும்
அன்னமயிலாடு மழகானஇல்லங்களும்
வன்னக்கிளிகள்கொஞ்சும் வாகானஇல்லங்களும்
போர்த்தொழிற்கற்றமன்னர் புரிந்திட்டநல்லிடமும்
எல்லாவளமு மிசைந்திருக்குங்காசிநகர்
வல்லாண்மைமன்னர்பலர் வந்துபணியும்நகர்
இந்தத்திருநகரி லென்றும்வான்முறையாய்
தன்னந்தனியே தனிச்செங்கோல்தான்செலுத்தும்
மன்னும்பொருமையிலே வண்பூமிக்கொப்பானேன்
கன்னல்விலைமாரனைப்போல்கட்டழகுதானுடையோன்
சொன்னமொழிதவருன் சொல்லிலரிச்சந்திரன்றான்
கன்னன்கொடைமாறக் கனகமளித்திடுவோன்
மன்னியவன்போரில் வள்ளிமணவாளனெப்பான்
சொல்லுமனு நீதியிலே தூயதசராஜனையான்
தொல்லுலகையாளுந் துளசிமகாராஜன்
மங்காது நீதிநெறி மானிலத்தையோர்குடைக்கீழ்
செங்கோல்செலுத்திச்செயம்பெற்றுவருநாளில்

அரசிருக்கை.

அ... லமைச்சர்சூழ்ந்துவரத் துளசிமகாராஜன்
வந்து...
சிந்தை...டிதரித்து மனுச்செங்கோல்கைபிடித்து
பல்லாயி...ஞ்சாமரைக ளணியணியாய்வீசிவர
இல்லார்...ளமாதர் நிறைகும்பமெடுத்துவர
காசிவிசு...தீப மரிவைமார்தாங்கிவரச்
ஆசையுட...யோர்கள் ஜெயவாழ்த்துக்கூறிவர
...ராடிவரக் கணிகைமார்பாடிவர
மன்னர்புடை...
சந்நிதிவீதியி...நெருங்க மற்றுமுள்ளோர்தானெருங்க
அண்ட...த்தளாவ...டிக்க வாள்வீரர்கைபிடிக்க
...க்கப் பலவிருதுதான்பிடிக்க

பற்பலவாத்தியங்கள் பறவைபோற்சத்தமிட
சொற்புலவோர் நற்கவியுஞ் சொல்லித்துதித்துநிற்கச்
சின்னங்களெல்லாஞ் சிறப்பாய்ப்பிடித்துநிற்க
மன்னியநாற்சேனை வகைவகையாய்ச்சூழ்ந்துநிற்க
அட்டசிங்கந்தாங்கு மாஸ்தானமண்டபத்தில்
பட்டமன்னரோடும் பண்பாய்க்கொலுவிருந்தான்
மண்டலத்தைத்தான்மதிக்கு மன்னன்மணிமுடிதான்
கடலெல்லாந்தான்மதிக்குங் காதலன்றன்கணையாழி
வாகுவலயமுந்தன் வானுலகைத்தான்மதிக்குஞ்
சேகுவயிரமணி செகத்தைவிலைமதிக்கும்
மார்பிற்பதக்கநிறை மதியொளியைமாற்றிவிடுஞ்
சோர்விலொளிபணிகள் சூரியனைத்தோற்கடிக்கும்
இந்தவகைப்பணிக ளிட்டிருக்குமன்னவன்முன்
பந்தமொடுதேசமன்னர் பகுதிகொடுத்துநிற்கக்
கட்டியர்களெச்சரிக்கை கைகட்டிக்கூறிநிற்க
நட்டுவர்பின்மாதர்பலர் நாட்டியங்கள்செய்துநிற்க
வெள்ளைத்தடிக்காரர் விதவிதமாய்வந்துநிற்கத்
துள்ளும்படைவீரர் துடிப்புடனேவந்துநிற்கச்
சேனைத்தலைவரெல்லாந் திறமுடனேசேர்ந்துநிற்க
யானைத்தலைவரெல்லா மஞ்சலொடுசேர்ந்துநிற்க
தையலர்கள்சங்கீதந் தான்பாடிமுன்நிற்க
மங்களவாழ்த்துநிறை மங்கியர்வாழ்த்திநிற்க
சங்கையில்லாமல்பொன் தானங்கொடுத்துநிற்க
எங்களரசனு ரிருக்குமந்தவேளையிலே
பொங்கமுடனவ்வரசன் புத்திரனில்லாமையில
வேதாந்தவேதியரை வேதப்பிராமணரை
சாதகரைமற்றுமுள்ள சாஸ்திரத்தில்வல்லவ
பார்த்தேயொருவார்த்தை பார்த்திபர்சொல்
கீர்த்திபெற்றவிற்பனரே கேள்வியினில்வ
அறுபத்திநான்குகலை யாவுமுணர்ந்தவனே

மறுவில்லாவென்குடிக்கு மைந்தனில்லாமையினுல்
சிந்தைதளர்ந்து திகில்கொண்டேன்பலநாளும்
எந்தவழியும்பிள்ளை யிசைந்தவழிசொல்வீரென்று
பூதலமாளுங்காசிப் பூபாலன்சொன்னவுடன்
வேதப்பிராமணர் விற்பனர்கள்சொல்லலுற்ருர்
அட்டதிக்காளும் அரசர்சிரோமணியே
பட்டந்தனக்குப்பிள்ளை பண்பாகவேண்டுமென்ருல்
காசிநதியாடிக் கருதிமூக்காலையிலும்
ஈசன்விசுவநாதன் எழிலானசன்னதிக்குள்
சென்று அபிஷேகமுதல் செய்வித்துப்பின்சிவனை
என்றுவணங்கியார்க்கும் எண்ணுன்குதர்மஞ்செய்யில்
அவனியொருகுடைக்கீழ் ஆளமகன்பிறப்பான்
சிவனருளாலேயுமக்குச் செல்வன்பிறக்குமென்பார்
சாஸ்திரிமார்கள்சொன்ன சன்மார்க்கச்சொற்கேட்ட
மாத்திரத்திற்தீர்த்தமாட மன்னனெழுந்திருந்தான்

தீர்த்தமகிமை.

கன்மவினைகளெல்லாங் கட்டறுக்குங்காசிநதி
தருமஞ்செய்வோர்க்குமுத்தி தானளிக்குங்காசிநதி
பிள்ளையில்லாதவர்மூழ்கிற் பிறப்பிக்குங்காசிநதி
அரிக்குமொருபதவி அளித்திட்டகாசிநதி
அந்தவினத்தோடு மளவில்சனத்தோடு
வந்துநற்கங்கைதனில் மனைவிகரம்பிடித்து
சிந்தைமகிழ்ந்துதிவ்ய தீர்த்தத்திலாடியபின்
பல்லாயிரங்கோடி பார்ப்பார்க்குத்தானஞ்செய்ய
இல்லார்பல்லோர்க்குத்தான் ஏகமாய்ச்செய்தபின்பு
காசிவிசுவநாதர் கனகோபுரங்கள்கண்டு
ஆசையுடன்வணங்கி அக்கோயில்நாடிமன்னன்
மன்னர்புடைசூழ மந்திரிமார்தான்தாழ
சந்நிதிவீதியிலே தார்வேந்தன்வந்தபின்பு
அண்டத்தளாவும்பல வானபொற்கோபுரமும்

எண்டிசையுங்காண இலங்குந்திருமதிலுஞ்
சொற்கத்தளாவிநிற்குந் துவசமணித்தம்பங்களும்
கற்களிழைத்திலங்கு கனமானஸ்தூபிகளும்
எங்குஞ்சிவாலயமு மெழிலானலிங்கங்களும்
தங்கத்தாற்போட்டிருக்குந் தளவரிசைச்சித்திரமும்
மூலைக்குமூலை மூத்தால்விளக்குகளும்
சாலைக்குச்சாலை தங்கவிளக்குகளும்
தேர்விளக்குஞ்சீர்விளக்குந் திருவாட்சிநல்விளக்கும்
பார்விளக்குக்கோபுரத்திற் பதித்தவிளக்குகளும்
சொல்லுநவமணிகள் சொலிக்கும்விளக்குகளும்
இல்லாவிளக்குமிந்த யீரேழுலகிலில்லை
அல்லும்பகலும் அறத்தொரியுஞ்சந்நிதியில்
வாழுமறையவர்கள் வரிசையெடுத்துப்பலர்
சூழும்படியாசன் சமுகம்வந்துமேவாழ்த்தி
அந்தமறையோர்க ளரசனைக்கோயிலுள்ள
சிந்தைமகிழ்ந்துதவஞ் செய்துசிவலிங்கமுன்னே
கொண்டுவிடுத்தபின்னர் கொற்றவனுங்கைகுவித்து
தொண்டுபுரிந்துசிவன் துங்கவடிதொழுதான்

மூர்த்தி மகிமை.

கண்டார்தமக்குமுத்தி களித்தருளுங்கானநதி
தொண்டுபுரிந்தோர்க்குச் சொர்க்கங்கொடுக்குலிங்கம்
க்ஷேத்திரத்திற்சேர்ந்தோர்க்குச் சிவலோகமீயுலிங்கம்
தோத்தரித்தபேர்களுக்குச் சூழ்வினை நீக்குலிங்கம்
வேண்டும்வரங்களெல்லாம் விரும்பிக்கொடுத்தலிங்கம்
யாண்டும்பிறவாத்தன்மை யார்க்குங்கொடுத்தலிங்கம்
எந்தத்தலத்து மிணையில்லாப்படிகலிங்கம்
இந்தத்தலத்துமேன்மை யெய்தும்விசுவலிங்கம்
தன்னைப்பணிந்தரசன் சூழ்ந்து அடிவணங்கி
என்றனக்குப்பிள்ளை ஈய்ந்தருள்செய்யுமென்று
பூஜைநைவேத்தியங்கள் புரிவித்துநல்விசைகள்

ஆசையுடன்பாடி ஆனந்தக்கூத்தாடி
காவலரண்மனைக்குள் காவலனும்போய்ப்புகுந்து
ஆவலுடனே அன்னம் அருந்திக்கொலுவிருந்து

அரசன் முப்பத்திரண்டறமுஞ் செய்தல்.

மந்திரிமார்களைத்தான் வகைவகையாய்வரவழைத்து
தந்திரிமார்களையே தந்திரமாய்வரவழைத்து
வேதியர்கள்சொன்ன விதிப்படிக்குத்தன்மஞ்செய்ய
நீதிமன்னர்பக்கலிலே நின்றவரைப்பார்த்துரைப்பான்
அடிக்கடிக்குநன்மதிசொல் அமைச்சர்களேகேளுங்கள்
படிக்குள்விளங்குகின்ற பலமானதானமெல்லாம்
என்பெயராலட்டதிக்கும் எழில்பெறவேசெய்வீரென
நன்மதிசேர்மந்திரிமார் நராதிபனுர்சொற்கேட்டு
திக்குக்குத்திக்குத் திரளானசத்திரமும்
தொக்கவுலகமெங்குஞ் சொல்லரியவாவிகளும்
மண்டலமெங்கும் வகைவகையாய்க்கோயில்களும்
கண்டங்களொன்பதிலுங் கனத்தமடந்தடமும்
கட்டுவித்தார்காசிநகர் காவலன்றன்சொற்படிக்கு
பட்டத்தரசரெல்லாம் பார்த்துமனமகிழ்ந்து
கோடிபிராமணர்க்குக் கொடுத்தான்செம்பொன்கோடி
தேடிப்பலதருமஞ் செய்துவிட்டான்தேர்விஜயன்
கன்னிகாதானங் கணக்கில்வெகுகோடி
அன்னமிடுதானம் அளவில்பலகோடி
பூதானம்வேதியர்க்குப் போற்றும்பலகோடி
கோதானமந்தணர்க்குக் கொடுத்தான்பலகோடி
நீர்ப்பந்தல்பூமியெங்கும் நிகரில்பலகோடி
மோர்ப்பந்தலப்புவியில் மொழியிற்பலகோடி
அறவைப்பிணஞ்சுடுத லதுவும்பலகோடி
பறவைச்சிறைவிடுதல் பாரிற்பலகோடி
கண்ணாடிகாதோலை கண்மருந்துபெண்போகம்
வண்ணமொடுசுண்ண மயிரின்சிறைகலைத்தல்

விலங்கிற்குணவு விலைகொடுத்தேயுயிர்காத்தல்
துலங்குமகப்பால்கொடுத்தல் சோலைசிறைசோறிடுதல்
இன்பண்டநல்கல் சேய்வளர்த்தலையமிடல்
வன்கல்வியோர்க்குணவு வாய்த்தபசுவுக்குப்புல்
இந்தவகைதருமம் இறைவன்கொடுத்தபின்பு
அந்தமுடன்சிவனை அரசன்மனைவியொடும்
சந்ததமுங்காசியில்வாழ் சங்கரனைத்தானோக்கிச்
சிந்தைமகிழ்ந்து செய்தார்பலவிரதம்
அந்தவகையறிந்தே ஆதிசிவன் அன்போடு
சந்தானங்காசிமன்னன் தன்மனைவிக்கேகொடுத்தார்

மதுரைவீரசுவாமி உற்பத்தி.

மேகந்தனைப்பழிக்கு மெல்லியநற்கூந்தலினாள்
தோகைமயிலைப்பழிக்குஞ் சொல்லரியசாயலினாள்
சந்திரனுங்கண்டு தயங்குந்திருமுகத்தாள்
இந்திரருக்கொப்பாக விளங்குமழகுடையாள்
அன்னந்தனைப்பழிக்கு மசைந்ததிருநடையாள்
மின்னலைப்பழிக்கு மேகலைப்பூணுடையாள்
பம்பரத்தைத்தான்பழிக்கும் பணைத்தவிளமுலையாள்
செம்பொற்சரிகை சிறக்குமெழிற்கலையாள்
அம்புவிழிமேலே யார்ந்தபுருவச்சிலையாள்
கம்பவாழைத்தொடையாள் கற்புமிகுநிலையாள்
துளசிமகாராஜனுக்குச் சொல்லுமுயிர்த்துணையாள்
வளமிகுந்தகற்பூர வல்லிதிருவயிற்றில்
கங்கையணிசிவனருளால் கருத்திரண்டகாலையிலே
மங்கைக்கரசி மதிமயக்கமானாள்காண்
மூன்றானதிங்களிலே மூலைகருத்துமுகம்வெளுத்தாள்
தோன்றுமயக்கமிகத் தோற்றமுடிவாகிநின்று
நான்கானதிங்களிலே நன்மசக்கைகொண்டாள்காண்
தேன்கதலிமாவருக்கை தித்திப்பிலிச்சைகொண்டாள்
ஐந்தானதிங்களிலே ஐம்பொன்போல்மேனிகொண்டு

சிந்தாகுலமிகுத்துச் சிந்தைமிகத்தளர்ந்தாள்
ஆருன திங்களிலே அடிவயறுதான் தளர்ந்தாள்
வீருனவேழுதிங்கள் மெல்லியிடைசிறுத்தாள்
எட்டான திங்களிலே எண்ணுதுமெண்ணிநின்ருள்
ஒட்டுமொன்பான் திங்களிலே உறக்கமிகவிடுத்தாள்
பத்தான திங்களிலே பாலகனைப்பெற்றெடுத்தாள்
மூத்தானவாய்திறந்து மூதல்மகனுந்தானமுதான்
ஆயிரங்கோடி அழகுள்ளசூரியன்போல்
மாயிருஞாலத்தில் வாய்க்காதரத்தினம்போல்
தங்கத்தைக்காய்ச்சித் தரையில்கவிழ்த்ததுபோல்
ஒருகோடிசூரியரை உருக்கிக்கவிழ்த்ததுபோல்
இருகோடிசந்திரரை எடுத்துக்கவிழ்த்ததுபோல்
கோடிமதனுருக் கொண்டுதிரண்டதுபோல்
நீடியபூமியிலே நிருபன்பிறந்தவுடன்
தேவாதிதேவரெல்லாந் தேன்மாரிதான்பொழிந்தார்
பூவுலகமெல்லாம் பூமாரிதான்பொழிந்தார்
அந்தாதுந்துமிகளைந் தமுழக்கிவிட்டார்
இந்திரவானவர்களெல்லோரும்வாழ்த்தலுற்ருர்
மண்டலத்திலுள்ளவர்கள் மங்களவாழ்த்துரைத்தார்
விண்டலத்திலுள்ளவர்கள் விதவிதமாவாழ்த்திநின்ருர்
பாலகனைப்பாரிலுள்ளோர் பலரும்வந்துபார்த்தார்கள்
வெடிசுற்றித்தான்பிறந்த குழந்தைதனைப்பார்த்தார்கள்
துடியிடையார்தோழிமார் துரிதமுடனேடிவந்து
தொல்லுலகையாண்டுவருந் துளசிமகாராஜன்முன்பு
வல்லகரங்குவித்து வாழியென்றுவாழ்த்தலுற்ருர்
எங்கள்குலதெய்வமே இறைவரே நீர்கேளீர்
மங்காதசெல்வமுள்ள மன்னவரே நீர்கேளும்
இக்கெல்லாம் ஆளவொரு செல்வனர்தாம்பிறந்தார்
மிக்கவடிவுடைய வேந்தனர்தாம்பிறந்தார்
பிள்ளைகலிதீர்க்கப் பேரரசர்தான்பிறந்தார்

வள்ளலேயிவ்வடிவாய் மாநிலத்திற்றான்பிறந்தார்
மாதர்தமைமயக்கும் மன்மதனார்தான்பிறந்தார்
காதல்மிகவளிக்குங் கட்டழகர்தான்பிறந்தார்
பிறந்ததிலேயாதும் பிசகில்லையெம்மரசே
சிறந்தமகன்பிறப்பிற் றீங்கொன்றுண்டெம்மரசே
மாலைசுற்றித்தான்பிறந்தால் மாமனுக்காகாதென்பார்
சாலைப்பெருங்குற்றந் தாரணியோர்சொல்வார்கள்
கொடிசுற்றித்தான்பிறந்தால் குலத்துக்காகாதென்பார்
வடிவுபெறுமகர்க்கு மற்றக்குறைவிலையே
என்றந்தத்தாதியர்கள் வேந்தனுக்குச்சொன்னவுடன்
குன்றனையதோள் நிமிர்ந்து கொற்றவனார்தான்மகிழ்ந்து
பிள்ளைபிறந்ததென்று பேரரசர்தான்களித்தார்
கொள்ளைகொடுத்தார் குறைவில்லாக்களஞ்சியங்கள்
சீனிச்சர்க்கரையை திக்கெட்டும்வழங்கிவிட்டார்
மானிலத்தில்பின்னே மனமகிழ்வாய்ப்பிரித்துவிட்டார்
அந்தப்புரத்தி லரசரெழுந்தருளிச்
சந்தமுள்ளதாதியரைத் தானழைத்துத்தன்மகனை
எடுத்துவரவே இறைவர்திருவாக்களித்தார்
அடுத்திருந்ததாதியர்க ளப்பொழுதேகொண்டுவந்து
மன்னவர்முன்பாக வைத்தார்பூந்தொட்டிலுள்ளே
சின்னக்குழந்தை திருமுகத்தைத்தான்பார்த்து
என்றுமடையாத வெக்களிப்புத்தானடைந்து
நின்றுமகிழ்ந்து நெடுநேரந்தான்பார்த்து
கொண்டுபோமென்றுசொல்லிக் கொலுவிலரசன்வந்து
மண்டலத்தையாளும்வல்ல மந்திரியைத்தானழைத்து
சோதிடத்தில்வல்லவரைச் சுருக்கிலழையுமென்றார்
நீதிதவறாதமைச்ச னிருபனார்சொற்படிக்குச்
சோதிடரைத்தானழைத்தான் சோதிடருமோடிவந்து
ஆசியுரைத்துமஞ்ச ளட்சதைவேந்தர்க்களித்தார்
என்னையழைத்தவிதம் என்னென்றார்சோதிடரும்

அந்தமொழிகேட்டே யாசன்விளம்பலுற்ருன்
வெள்ளிக்கிழமைதனில் விடிந்துபத்துநாழிகையில்
வள்ளல்கழுத்திலே மாலைசுற்றித்தான்பிறந்தான்
திதிகரணம்வாரஞ் சிறந்தயோகமிவைநாள்
தகியறிந்துபஞ்சாங்கஞ் சாஸ்திரத்தைப்பாருமென்ருர்
அப்படியேசோதிடரு லந்தணர்தான்பார்த்து
செப்பருநாளுநத்திங்கள் திதிவாரந்தீங்கெனவே
சோதித்தறிந்தபின்பு துளசிமகாராஜனும்
பேதிக்காச்சோதிடரும் பேசத்தொடங்கலுற்ருர்
திக்கெட்டுங்கீர்த்தி செலுத்தும்செங்கோல்வேந்தே
தக்கதவம்புரிந்து தான்பெற்றபிள்ளையது
சனனமெடுத்ததினம் தாயணிக்கேயாகாது
கனமானபொல்லாங்கு காசிநகர்க்கெய்திவிடும்
நாளுங்கோளும்பிறந்த நாட்டுக்கேயாகாது
மீளும்பெரும்போரு மிகச்சிறியபிள்ளையினல்
குழந்தையைவைத்திருந்தாற் கோத்திரத்திற்காகாது
இழந்திடுவீர்நாடுநக ரிக்குழந்தைதன்னலே
அருமகனைவைத்திருந்தா லாண்மனைகள்வெந்துவிடும்
திருமகனைவைத்திருந்தால் தேசமெலாம்வெந்துவிடும்
என்றுமிகவுரைத்தா ரெழிலானசோதிடரும்
குன்றிவயரெரிந்து கோபமிகக்கொண்டாசன்
அந்தமொழிகேட்டே யடித்தலறித்தான்விழுந்தார்
சிந்தைதளர்ந்து தியங்கிவேந்தன்மயங்கி
அப்பாமகனேயென் றபயமிட்டுத்தான்புலம்பி
எப்படிஎன்செய்வேனினிப்பிழைக்கேனென்றுசொல்லி
துங்கவுலகாளுந் துளசிமகாராஜர்
அங்கம்வியர்த்தே யவனிதனிற்புரண்டு
வாயிலேமண்ணை வாரியடித்துக்கொண்டார்
கோயில்தெய்வமெல்லாங் குறித்துமிகவைதார்காண்
பேச்சுமூச்சில்லாமற் பிணம்போலுமானுர்காண்

பூச்சக்கிரமாளும் புகழ்காசிமன்னவனூர்
மந்திரிமார்களெல்லா மனதுமிகக்கலங்கி
அந்தவாச னருகினிற்சென்றேயெழுந்து
சுக்குப்பொடிகாதிற் சொரிந்துவாயாலூதி
இக்காளுமன்னவரைத் தெளிந்துவிடச்செய்தார்கள்
சோகமதுதீர்ந்து துளசிமகாராஜர்
தாகந்தெளிந்துமவர் தனியேயெழுந்திருந்து
கோடிதருமஞ்செய்தும் கொடும்பாவியானேனென்றூர்
நாடித்தவம்புரிந்தும் நான்பாவியானேனென்றூர்
முற்பிறப்பிற்செய்தவினை மூண்டதென்றூரிப்பிறப்பில்
நல்லபிள்ளைதன்னையினி நான்செய்வதென்னவென்றூர்
வந்திருந்தசோதிடர்கள் மன்னவரைத்தான்பார்த்து
இந்தமகனையினி இங்குவைக்கலாகாது
எந்தவிதமும்பிறர்க் கீய்ந்திடுதலுத்தமமாம்
அப்படிக்கின்றேல் அடவிதனில்போட்டிடுங்கள்
என்றுமுறையே யெடுத்துரைத்தாரிவ்வார்த்தை
குன்றனையதோள்வேந்தர் கோவென்றழுதுவிம்மி
ஐயையோதெய்வமே யடாதமொழிநான்கேட்டேன்
உய்யும்வகையறியே னுகோகோவென்னசெய்வேன்
இறந்தபிள்ளையைக்கொடுக்க எவர்க்குமனந்துணியாதே
பிறந்தபிள்ளையைகொடுக்க பேருலகிற்றுணிவாரோ
உயிரோடுபிள்ளைதனை யோட்டிவிடவெண்ணுவாரோ
ஆனாலும்பாவியென்போ லம்புவியிற்கண்டிலனே
தேனூரிதழிமுடிச் சிவனூர்செயலிதுவோ
வேதன்விதித்த விதியின்பயனிதுவோ
ஏதுமறியேனென்றே இறைவர்மனந்துணிந்தார்

மதுரைவீரனை வனத்தில் விடச்சொன்னது.

ஆதுவரைவிட்டரசர் தோழிகளைவரவழைத்து
மாதுகற்பூரவல்லி மைந்தனைப்பொற்றட்டில்வைத்து
மேதினியோர்காணமல் மிகவிருண்டகாட்டினுள்ளே

காதலுறுமகனைக் கைக்கொண்டுபோய்விடுத்து
வாருங்களென்றுசொல்லி மன்னர்வலுவாக்களித்தார்
காரும்வெருண்டோடுங் கருங்கூந்தற்சேடியர்கள்
அந்தமொழிகேட்டே யந்தப்புரஞ்சேர்ந்து
கன்னிகற்பூரவல்லி கடிவாசலுட்புகுந்து
கண்ணீர்ததும்பிடவே காயம்நடுங்கிடவே
வண்ணமுகஞ்சோர்ந்து வாடிமிகவழுது
செல்வன்பிறந்ததினந் தேசத்துக்காகாதென்று
வல்வேந்தருன்மகனை வனத்தில்விடவாக்களித்தார்
எங்கட்கரசியரே யாங்களென்னசெய்வோமம்மா
செங்கோலரசரது சித்தமறியோமம்மா
என்றந்தத்தாதியர்க ளியப்புமுறைகேட்டு
குன்றினையொத்ததனத்தாள் கூக்குரலிட்டேயழுது
கண்ணிலறைந்துகொண்டு கையைமுறித்துநின்றாள்
மண்ணில்விழுந்தழுதாள் மார்பிலடித்தழுதாள்
கூந்தல்விரித்தரசி கூச்சலிட்டுத்தானழுதாள்
ஏந்திழைமார்களேயான் என்னசெய்வேனென்றழுது
மைந்தன்றனையிழந்த மாபாவியென்பாரே
அழகுமகனில்லாத அரும்பாவியென்பாரே
காட்டில்மகனைவிட்ட கடும்பாவியென்பாரே
நாட்டில்பலபேர்கள் நகைத்திகழ்ந்துசொல்வாரே
என்னசெய்வேன்சிவனே யேன்றேங்கிமிகத்துடித்து
தன்விதியைத்தானினைந்து சலித்துமனதுநொந்து
முட்டியழுதாள்மகன் முகம்பார்த்துத்தானழுதாள்
கட்டியெடுத்துமகன் கண்முகத்தைப்பார்த்தழுதாள்
அப்பாமகனேயென் னருமைத்திருமகனே
இப்பாரையாளவந்த யெங்கள்குலக்கொழுந்தே
தேடக்கிடைக்காத செழுந்தேனேதெள்ளமுதே
நாடாளவந்தயெங்கள் நாயகமேநற்றிருவே
தவமாதவமிருந்து தான்பிறந்தரத்தினமே

அவமானக்காட்டில்விட அரசர்மனங்கொண்டாரோ
மாபாவியென்வயிற்றில் வந்துதித்தபாக்கியமே
பூபாலருனைவனத்தில் போக்கிவிடச்சொன்னாரோ
இந்தவிதிக்கோ நீ என்வயிற்றில்வந்துதித்தாய்
அந்தப்பிரமனுனக் கமைத்தவிதியிதுவோ
பிள்ளையில்லையென்று பெருந்தவசுதான்புரிந்தேன்
வள்ளலில்லையென்றுபல வகைவிரதம்நான்புரிந்தேன்
ஐயோ திருவுளமே ஆதிசிவனேயென்று
கையைநெரித்துக் கதிச்சலித்தினைத்தாள்
பக்கலிலே நின்றிருந்த பாங்கியார்தானெழுந்து
மிக்கத்துயர் நீங்க மெல்லியலைத்தேற்றுவித்தார்
பட்டணத்துமன்னர் பலராமர்மந்திரிகள்
திட்டமுள்ளசேவகர்கள் சேனைத்தலைவர்மற்றோர்
கற்பூரவல்லி கடிமனையினுட்புகுந்தார்
துளசிமகாராசர் துயரமிகவடைந்து
தளராதேயென்றந்தத் தையலலைத்தேற்றுவித்து
மன்னன்மனைவியரு மண்ணிருகத்தானழவே
அன்னைதுயர்கண்டு அனைவோருமேயழுதார்
பட்டணத்திலுள்ளவர்கள் பார்த்துமிகவழுதார்
அட்டதிக்குமன்ன ரழுதுமிகச்சூழ்ந்துவர
அப்போதுதங்கத்தினு லமைந்திலங்குந்தட்டி னுள்ளே
இப்போதுபாலகனை எடுத்துவளர்த்துமென்று
பாங்கியர்க்குப்பார்வேந்தன் பகர்ந்திட்டானப்பொழுது
தாங்கினாரம்மகனை தாதியர்பொற்றட்டதனில்
வைத்துத்துளசி மகாராசர்முன்புவந்து
இத்தகியேதுவரை யெடுத்துமுத்துத்தண்டிகையை
கொண்டுவரச்சொன்னார் கொற்றவனார்பொற்சிவிகை
மண்டலமாளும் மகுடம[illegible]னரக்கணமே
மன்னுமுத்துத்தண்டிகையில் மைந்தனையேற்றுவித்து
இந்தக்குழந்தைதன்னை எல்லோருங்கொண்டேகி

காட்டில்விட்டுவாருமென்று கட்டளையிட்டானரசன்
கேட்டவர்செங்கோலின் கீழ்ப்படிந்துபோகலுற்றார்
முத்துச்சிவிகையைச்சூழ் முடிமன்னர்மூக்கோடி
யானையொருகோடி யணிதேரிருகோடி
சேனைபலகோடி ஜெயவீரரெண்கோடி
ஆட்டமும்பாடல்களு மதிர்வேட்டுக்கோஷ்டமுடன்
கூட்டமுடன்மகனைக் கொண்டுநடக்கலுற்றார்
காசிநகரைவிட்டுக் கடுகவெளியில்வந்தார்
தேசிகுலமன்னர்வாழ் சிறப்பானவீதிவிட்டு
யானைவிலைமதிக்கும் யருமன்னர்வீதிவிட்டு
சேனைத்தலைவர்வாழும் சிங்காரவீதிவிட்டு
குதிரைவிலைமதிக்கும் குச்சிலியர்வீதிவிட்டு
சதுரில்நடனமிடுந் தாசியர்கள்வீதிவிட்டு
போட்டசட்டைவாங்காத பூபாலர்வீதிவிட்டு
கொட்டிப்பலதொழில்செய் கொல்லர்வாழ்வீதிவிட்டு
காசிநகரைவிட்டுக் கானகத்திற்போய்புகுந்து
தேசமன்னரெல்லவருஞ் சிறந்தவனம்புகுந்து
காரைபடர்ந்தவனங் கருங்காளாப்பூக்கும்வனம்
சூரைபடர்ந்தவனம் சுண்டக்காய்காய்க்கும்வனம்
குன்றுமலைகளிலே கொடும்புலிகள்சூழும்வனம்
ஆறுமடுவுகளும் அழகாய்நிறைந்தவனம்
கூவும்பெருமிருகம் குலாவியிருக்கும்வனம்
சிங்கம்கரடிசெந்நாய் சீறிநெருங்கும்வனம்
எங்கும்விஷப்பாம்பு இருந்துகுலாவுவனம்
இன்னும்பலமிருக மிருக்கும்வனந்தனிலே
மன்னன்மகனைமுத்து வண்சிவிகையோடிறக்கி
திட்டமுள்ளபுல்லிடத்தைத் தெரிந்துமவர்பார்த்து
தட்டோடுபாலகனைத் தாழவேதானெடுத்து
மண்ணில்வைத்தபாலகன்மதிமுகத்தைப்பார்த்தழுதார்
கண்ணீர்சொரிந்தார்கள் கதறியழுதார்கள்

இரண்டுவெந்தசேனைகள் இகிலடைந்துதானழுதார்
இருண்டவனந்தனிலே எல்லோருந்தாமழுதார்
காட்டைவிட்டுநாட்டிற் கடுகநடந்தார்கள்
மலைகள்குகைகடந்து வந்தார்கள்பட்டணத்தில்
கோட்டையிற்செல்லுதற்குக் குறுகிநடந்தார்கள்
உலகாளுமன்னவர்க்கே வுத்தாரஞ்சொன்னார்கள்
அவரவர்வாழிடத்தி லன்பாயிருந்தார்கள்
நகையில்லாப்பாலனுக்கு நடக்கின்றவாறுசொல்வேன்

மதுரைவீரனுக்கு நாகமுதவிசெய்தது.

பாலகனுமப்போது பாரவனந்தனிலே
ஓலமிட்டுத்தானலறி ஓங்கியழுகையிலே
மாமரத்தினிழலிலே மைந்தன்தனியாயிருந்து
தாமரை நீர்போலத் தயங்கியழுகைகண்டு
மாணிக்கநாகமது மனதுமிகவுருகி
ஆணிப்பொன்போல்விளங்கு மாசமைந்தன்பக்கலிலே
வந்துபடம்விரித்து மதிமுகத்தைத்தான்பார்த்து
அந்தக்குழந்தைக் கரியமுத்தந்தான்கொடுத்து
புத்தியும்யோகமும் பொருந்தியிருப்பதற்கு
நாக்கில்சரஸ்வதிதான் நன்றாகத்தான்விளங்க
முகத்தில்திருவழகு முன்னின்றுதான்விளங்க
எதிர்த்தவரைவெல்ல ஏமனதுஅட்சரமும்
நீசனில்லாவீட்டில் நிச்சயமாய்த்தான்பார்த்து
அலங்காரவீரனென்று ஆனதொருபேரும்வைத்து
மன்னர்களைவெல்ல மந்திரவாள்கைக்கொடுத்து
வீரப்பனென்றுசொல்லி விதமாய்மதுரையிலே
பூசைபலிகொடுத்துப் போற்றித்துதித்திடவே
இந்தப்புவியோரை யென்றென்றும்காத்திடவே
மீனாட்சிகம்பத்தடி விளங்கவே நீயிருப்பாய்
முன்பூசைகொண்டு முப்பூசைதான்பெறுவாய்
பத்துவயதினிலே படைமுகம்வென்றிடுவாய்

கள்ளரைவென்று கனமதுரையாண்டிடுவாய்
பெண்களினுலே பெரும்பதத்தைச்சேர்ந்திடுவாய்
என்றுமேசொல்லி இனிதாகத்தான்வாழ்த்தி
தேவாமிர்தத்தை தினந்தோறுந்தான்புகட்டி
இப்படியாக இருக்குமந்தவேளையிலே

மதுரைவீரனை சக்கிலிச்சிகண்டெடுக்கிறது.

காசிநகரைச்சேர்ந்த கனமானகிராமத்தில்
பாலைவனந்தனிலே ப்தரட்சைதைத்துவளர்
மாதிகச்சின்னுன் மனைவியாம்சக்கிலிச்சி
மைந்தனில்லையென்றுசொல்லிமதிமயங்கித்தானிருந்து
காசிவிஸ்வநாதனையும் கனவிசாலாட்சியையும்
பூசையனுஷ்டானம் புதியதவம்புரிந்து
மாதிகன்தேவியும் மன்னுந்தரைமெழுகி
போசனஞ்செய்து போற்றிவந்தாள்ஈஸ்வரனை
இப்படியாக யிருக்குமந்தவேளையிலே
பாங்கானமாதிகனும் பாதரட்சைதைத்திடவே
வாறுகளும்சம்புகளும் வகையாகவூறவைக்க
ஆவரம்பட்டைக்கு அன்புடனேபோவென்றுன்
நல்லதென்றுசொல்லி நலமுடனேமங்கையுமே
அசைந்துநடந்தாளே அந்தவனந்தானேக்கி
காசிநாடாளுமன்னன் கண்மணிக்குநேரான
பாலனிருக்குமந்த பாரவனம்நோக்கி
வழிகூடிப்போகையிலே மங்கைநல்லாளப்போது
காணுதநற்சகுனங் கண்டாளேகண்களிக்க
காகம்வலமாச்சு காடையிடமாச்சு
மங்கிலியப்பெண்கள் வாழ்த்திவரக்கண்டாளே
தையனல்லாள்தானுந் தண்ணீரைத்தான்கொண்டு
நிறைகுடங்கொண்டு நேராகத்தான்வரவே
கண்டுமனமகிழ்ந்து காரிகையுமப்போது
அசைந்துநடந்தாளே அரிவையருமப்போது

காட்டில்புகுந்தாளே காரிகையுமப்போது
அரிவாளுங்கைப்பிடித்து ஆவரம்பட்டைவெட்டி
பட்டையெடுத்துக்கட்டி பயணமதாய்வருகையிலே
மாமரத்தின்கீழே மைந்தனைக்கண்டாளே
நாகத்தைப்போற்றிசெய்து நலமுடனேதெண்டனிட்டு
மன்மதனுக்கொப்பான வடிவுள்ளபாலகனை
கண்டுமனமகிழ்ந்து காரிகையுமப்போது
பிள்ளைகலிதீர்க்கவந்த பெருமையுள்ளமைந்தனென்று
வாரியெடுத்து மாரோடேதானணைக்க
பைங்கிளியாள்தன்னுடம்பு பசுமைநிறந்தானுச்சு
பாரஸ்தனங்களிலே பாலுஞ்சொரிந்திடவே
பாலகனும்பால்குடித்துப் பசியாறினபின்பு
கோலமயிலணையாள் குளிர்ந்துமனமகிழ்ந்து
பாலகனைமடியில்வைத்துப் பட்டையுந்தானெடுத்து
வேர்த்துவிருவிருத்து வீட்டுக்குவாராள்காண்
இவள்வருவதற்குள்ளாக இந்நேரமென்னவென்று
சந்தேகந்தோன்றிச் சக்கிலியன்தானெழுந்து
கையில்தடியெடுத்துக் கனத்ததொருதோளில்வைத்து
பூமியதிர்ந்திடவே பொற்கொடியைத்தான்தேடி
கோபமிகக்கொண்டு கொம்பனையாள்முன்னேவந்து
கண்டானேபெண்ணனங்கைக் கண்கள்சிவந்திடவே
இந்நேரங்கானகத்தி லென்செய்தாயென்றுசொல்லி
சக்கிலியன்தானுந் தடியெடுத்துவோங்கையிலே
அடியாதேயென்கணவா அதிசயஞ்சொல்லுகிறேன்
கோபத்தைத்தானடக்குங் குணமுள்ளபத்தாவே
மைந்தனில்லாததினால் மாதவங்கள்செய்தோமே
பிள்ளைக்கவலை பெருங்கவலைதீர்ந்ததிப்போ
ஆதிசிவன்கர்த்தனமக் காண்பிள்ளைதான்கொடுத்தார்
மாணிக்கம்போலிந்த மைந்தன்றனையளித்தார்
இந்தாரும்பிள்ளையென் றேந்திழையாளுங்கொடுத்தாள்
தட்டோடுபாலகனைத் தான்வாங்கிச்சக்கிலியன்

இன்பக்கடல்குளித்து இருபுஜமும்பூரித்தான்
வீட்டிலேதான்வந்து மெல்லியுடன்சென்றனும்
சக்கிலிச்சிகையில் தனயன்தனைக்கொடுத்து
தச்சனொருவனைப்போய்த் தானழைத்துவந்தான்காண்
மைந்தனுக்குத்தொட்டில் வளமுடனேசெயுமென்றான்
அப்படியேதச்ச னமைத்தானேதொட்டிலுமே
மாணிக்கத்தைப்புதைத்து வச்சிரத்தால்பூண்கட்டி
பச்சைமாகதமும் பாங்குடனேதானமைத்து
தங்கக்கொலுசுசெய்து தான்பூட்டிதச்சனுமே
கொடுத்திடவேமாதிகனுங் கோதையருமேவாங்கி
பாலகனைத்தாமெடுத்துப் பதிவானதொட்டிலிலே
கண்மணியைத்தான்வளர்த்திக் காரிகையுந்தாலாட்ட

மதுரைவீரனுக்குத் தாலாட்டல்.

ஆரிவரோ ஆரிவரோ ஆரிவரோ ஆரிவரோ

புத்திரனேயுந்தனுக்குப் புகழ்ச்சியுடன்தாலாட்ட
நித்திரைசெய்யுமந்த நேரானகண்மணியே (ஆ)

கண்ணேயுறங்கு கற்பகமேநித்திரைசெய்
கண்ணேஎன்கண்மணியேகற்கண்டேசர்க்கரையே (ஆ)

ஆதிசிவன்மகனே ஆயன்மருமகனே
சோதிக்கவந்தவனே துய்யகணபதியோ (ஆ)

தேனனகண்ணே தெவிட்டாததெள்ளமுதே
பாலூறும்வாயுடைய பாலகனேபைங்கிளியே (ஆ)

கானகத்தில் நீயும் கவிழ்ந்துவிளையாட
நானெடுத்துவந்த நாயகமேகண்வளராய் (ஆ)

எந்தனுக்குப்பிள்ளையென்று ஈஸ்வரனார்தந்தகண்ணே
சுந்தரமாய்நித்திரைசெய் சொர்னமயத்தொட்டிலிலே

பிள்ளைக்கவலை பெருங்கவலைதீர்க்கவந்த
வள்ளலேகண்ணே மணியேமணிவிளக்கே (ஆ)

மாறுபடாப்பாலகனே மாசிலாக்கண்மணியே
வேறுபடாப்புத்தமுதேவிண்மணியேகண்வளராய் (ஆ)

அங்கயற்கண்ணம்மை அருள்பெற்றபாலகனே
எங்கள்குடிதழைக்க யென்மகனேகண்வளராய் (ஆ)

இப்படித்தாலாட்ட ஏற்றசிறுபாலகனும்
நித்திரையுஞ்செய்து நினைவுவந்துபாலகனும்
பசியெடுத்துபாலகனும் பதரியமுலையிலே
தாவியேசக்கிலிச்சி தானெடுத்துப்பால்கொடுத்தாள்
பால்கொடுத்துப்பசியாற்றிப் பாலகனுமப்போது
எண்ணெய்தலையிலிட்டு யிளம்வெந்நீர்தான்வார்த்து
உச்சியூதித்துடைத்து உடம்பெல்லாந்தான்துவட்டி
இட்டமுள்ளநெற்றியிலே திருநீற்றுக்காப்புமிட்டு
நேரானநெற்றியிலே திலக்காப்புதானுமிட்டு
நீலவிழிகண்களுக்கு நேர்மையுடன்மையெழுதி
பிள்ளைக்குத்திருஷ்டி பிரியமுடன்சுற்றுதற்கு
நெல்லும்அறுகும் நேரானமஞ்சளுடன்
பருத்திவிரைச்சுண்ணும்பு பரிவாகத்தான்பிசைந்து
தண்ணீர்முகந்துவந்து தாம்பாளத்திற்போட்டு
இப்படியாக இனிவளர்க்கும்நாளையிலே
மாதிகனைத்தானழைத்து மங்கையருமேதுசொல்வாள்

மதுரைவீரனுக்குக் காதுகுத்தல்.

மூன்றும்பிராயத்தில் மூத்தமிட்டுக்காதுகுத்த
நல்லநாள்கேட்டு நட்சத்திரந்தான்பார்த்து
இட்டமுள்ளதட்டானைச் சீக்கிரமாயழையுமென்றாள்
அந்தநல்லாள்சொற்கேட்டு ஆனதொருமாதிகனும்
கூட்டிவந்துதட்டானைக் குழந்தையைப்பாருமென்றான்
பார்த்துமந்தத்தட்டானும் பாலகனுக்கேற்றாற்போல்
தங்கத்தால்கம்பி சதுராகத்தான்வளைத்து
கீழ்க்காதைமேற்காதை கிரமமாய்க்குத்திவிட்டான்
படியரிசிதட்சணையும் பாக்கிலையும்சர்க்கரையும்

அத்தனையுந்தான்கொடுத்து அனுப்பினான்தட்டானை
மாதிகனும்மங்கையரும் மனதுமிகத்தான்குளிர்ந்து
சந்தோஷமாகித் தயவாயிருபேரும்
இப்படியாக யிருக்கின்றவேளையிலே

மதுரைவீரன் சக்கிலியன்வீட்டில் வளருகிறதைக்
காசிராசாவுக்குத் தெரிவித்தல்.

காசிப்பட்டணத்திருக்குங் கனத்தவெகுமாந்தர்களும்
மாதிகச்சின்னானுக்கு மைந்தன்வந்தசேதிதன்னை
பட்டணத்திலுள்ளசனம் பாங்குடனேதாமறிந்து
இராஜனுடபிள்ளையென்று நலமாகவோடிவந்து
மாதிகச்சின்னானும் மைந்தனைவளர்க்கின்றான்
என்றவர்கள்சொல்ல இந்தச்சமயத்தில்
இப்பெரியபட்டணத்தில் இருந்தோமேயானக்கால்
தன்பிள்ளையென்று தானழைத்துக்கொண்டிடுவான்
மறுதேசம்போய் மங்கையரேநாம்பிழைப்போம்
அப்படியேநல்லதென்று அன்பாயிருவருந்தான்
மைந்தனைத்தானெடுத்து மறுதேசம்போனார்கள்
காடுமலைதாண்டிக் கடுகிநடக்கலுற்றார்
பொம்மணன்சீமைக்குப் பொட்டெனவேவந்தார்கள்
யாதென்றுசொல்லி யழைப்பித்தார்பொம்மணனும்
எந்தவூரெந்தநாடு எங்கிருந்திங்குவந்தீர்
என்றதற்குமாதிகனும் எந்திழையுஞ்சொல்லுகிறர்
காசியெனும்பட்டணத்தைக் கடந்தவரலாற்றைக்கேள்
பஞ்சைகள்பிழைக்க பரதேசம்நாங்கள்வந்தோம்
வயிறுபிழைக்க மறுதேசம்நாங்கள்வந்தோம்

மாதிகச்சின்னான் பொம்மண நாயக்கனிடத்திற்
சேவகத்திற்கமர்தல்.

அந்தநல்லசேதி அறிந்தானேபொம்மணனும்
என்னிடத்திற்சேவகமா யிருப்பாயோமாதிகனே
அப்படியேநல்லதென்று அமர்த்தினான்பொம்மணனும்

சேவகஞ்செய்து சிருடனே தாவிருந்தான்
சந்தோஷமாகத் தயவாயிருக்கையிலே
பிள்ளைக்குச்சிங்காரம் பிரியமுடன்பூட்டலுற்றுன்
நெற்றிக்குச்சுட்டிகட்டி நிழல்கண்ணுடியுங்காட்டி
காதிலேமத்திக்காய் சனமாகத்தொங்கவிட்டு
பச்சைக்கல்முருகு பவளத்தால்தாழ்வடமும்
காலிற்சிலம்பணிந்து கைக்குத்தங்கக்காப்புமிட்டு
பூரணமெல்லாம் பூட்டிஞுன்மாதிகனும்|
நாளொருமேனியுமாய் நலமாகத்தான்வளர்த்தான்
பத்துவயதானதின்மேல் பதிஞலாம்வயதினில்
சரிகைச்சந்திரக்காவித் தலைப்பாகைசுட்டியுடன்
வன்னக்கம்பிச்சோமன் வகையாயுடுத்தியங்கே
பட்டுக்கம்பிச்சோமன் பாங்காய்வரிந்துகட்டி
இடதுபுறத்தொங்கலிலே எமனதுஅட்சரமும்
வலதுபுறத்தொங்கலிலே வடமலையானட்சரமும்
பார்வதிகடாட்சத்தால் பரிவாகவுண்டாச்சு
பஞ்சவர்ணப்பட்டாடை பாங்கானசாலுவையும்
முன்கையிற்சந்தனமும் முறுக்கிவிட்டமீசைகளும்
கஸ்தூரிபொட்டுமிட்டுக் கனத்ததிருமார்பிலுமே
சந்தனமும்புனுகுந் தாராளமாய்ப்பூசி
இப்படியாய்த்தானே இருந்துவருகையிலே

மதுரைவீரன் பராக்கிரமம்.

குச்சிவுருமாலைகட்டிக் கூசாமல்வீரையனும்
கச்சைவரிந்துகட்டிக் கருங்கச்சைசுங்குவிட்டு
காலில்மிதியடியுங் கையிலுண்டைவில்பிடித்து
மந்திரவாளெடுத்து மதயானைபோலெழுந்து
எதிர்க்கத்தான்கண்டவரை எண்ணியேபாராமல்
கண்டமுனிராட்சதரைக் கண்டதுண்டமாக்கிடுவான்
காளிகதவடைக்க கண்டமுனிதெண்டனிட
வேட்டைகளாடுவதும் வேங்கைபுலிகுத்துவதும்

மாதிகன்சொல்கேளான் வனங்களிலேபோய்விடுவான்
காடிபுலிசிங்கம் காட்டானைகொல்கிறதும்
வேஷங்கள்மாறிவீட்டில்வருகிறதும்
வருகிறதைக்கண்டு மாதாமனமகிழ்ந்து
வந்ததொருவீரனுக்கு வரிசையுடனன்னமிட்டு
குத்துப்பருப்புமிட்டு கூசாமல்நெய்வார்த்து
சுண்டக்கறிவகையும் சுகிப்பானபோசனமும்
வாழைப்பழம்சர்க்கரையும் வகைவகைதான்வைத்தாள்
சாப்பிட்டுக்கையலம்பித் தாம்பூலந்தான்தரித்து
பள்ளியறையிற்புகுந்து பாங்கானகட்டிலிலே
பள்ளிகொண்டுவீரையனும் பண்பாயெழுந்திருந்து
இப்படித்தானும் இருக்குமந்தவேளையிலே

தொட்டியன்மகள் ருதுவான இடத்தில்
மதுரைவீரன் காவலிருந்தது.

பட்டணத்தையாளும் பரிவானதொட்டியனும்
பொம்மணநாயக்கன்மகள் பொம்மியம்மாளென்பவள்
புத்தியறிந்ததின்மேல் பூவைதனைப்பொம்மணனும்
ஊருக்குமேற்கே ஒருநாழிதூரத்திலே
பச்சைக்குடிசைகட்டிப் பண்பாயலங்கரித்து
பொம்மியம்மாளைப் பொங்கமுடன்கூட்டிவந்து
அந்தக்குடிசைதனில் அமர்ந்திருக்கச்செய்துவைத்து
மாதிகச்சின்னானை வரவழைத்துத்தானுடனே
அல்லும்பகலும் அறுபதுநாழிகையும்
பட்சிபறவாமல் பகல்மோசம்வாராமல்
காட்டானைசிங்கம் கரடிபுலிவாராமல்
கள்ளர்திருடர் கடுவிஷங்கள்தீண்டாமல்
காற்றுமழைவந்ததென்று காவல்தப்பிப்போகாமல்
இருட்டுக்கருக்கலென்று ஏமாந்திருக்காமல்
முப்பதுநாளும் முழித்துக்கொண்டுதானிருந்து
பைங்கிளியாள்தன்னைப் பத்திரமாய்க்காத்திருப்பாய்

காரும்பிள்ளாயென்று கட்டளையுமிட்டானும்
நல்லதையாவென்று நலமுடனேமாதிகனும்
மாதிகச்சின்னனும் மாளிகைக்குத்தான்வந்து
குச்சிவுருமாலைகட்டிக் கொடுவாளுங்கையேந்தி
கச்சைவாிந்துகட்டிக் கட்டாரிகைபிடித்து
அம்புவில்லுங்கையேந்தி ஆயுதங்கள்தான்தரித்து
பொம்மியம்மாள்காவலுக்கேபோய்வாரேன்மாதிகனுன்
அல்லும்பகலும் அறுபதுநாழிகையும்
காகமணுகாமல் கருங்குருவிநாடாமல்
பட்சிபறவாமல் பகல்மோசம்வாராமல்
இப்படியாக இவன்காக்கும்நாளையிலே
வருணபகவானும் வந்துகவிந்ததினால்
ஈரேழுலகமெல்லாம் இருள்வந்துசூழ்ந்ததினால்
வயதுசென்றமாதிகனும் மனதுநொந்துமெய்நடுங்கி
பொம்மியம்மாள்காவலுக்குப் போகக்கூடாமையினால்
மனதிலேயெண்ணி மகனுடனேசொல்லலுற்றான்
வீரப்பன்தான்கேட்டு வெகுவாய்மனங்குளிர்ந்து
இந்தவிருட்டிலேதான் எப்படி நீர்போவீரையா
பிள்ளையென்றுநானிருக்கப் பெரியவர் நீர்போகலாமோ
மங்கையுடகாவலுக்கு மைந்தனான்போய்வருவேன்
என்றுசொல்லித்தானும் எழுந்திருந்தான்வீரையனும்
எழுந்திருந்துதான்போய் எண்ணமற்றகாளையவன்
சலவைக்கல்மண்டபத்தில் சாமிபோல்நின்றுகொண்டு
சம்பங்கிஎண்ணெயால் தலைமுழுகிமயிராற்றி
கோதிமயிலைக் கோணாமல்சிக்கறுத்து
செங்கமலக்கையாலே சீக்கிரமாய்த்தான்முடித்து
சிவசிவாவென்றே திருநீறணிந்துகொண்டு
சந்தனங்கஸ்தூரி தானணிந்துமார்புதனில்
பஞ்சவர்ணப்பட்டாடைப் பாங்காயலங்கரித்து
சிவத்தவுருமாலாம் செண்டுகட்டும்பாவனையாம்

மண்டியிடுங்கால்களுக்கு மாதளம்பூச்சல்லடமாம்
கச்சைவரிந்துகட்டி கருங்கச்சைதானணிந்து
முன்னின்றதொங்கலிலே மோககன்னியட்சரமாம்
பின்னின்றதொங்கலிலே பிர்மாவினட்சரமாம்
உள்ளேகபாயணிந்து உடம்பெல்லாமங்கிபூண்டு
நெற்றிக்குச்சுட்டிகட்டி நேர்விழிக்குமையெழுதி
பாசிபந்துதாயித்தும் பாங்காகக்கையில்கட்டி
ஆபரணமெல்லாம் அலங்கரித்துத்தானுமப்போ
எட்டுதுலாங்கத்தி இத்துடனேகேடகமும்
உண்டைவில்லுங்கையில் உடைவாளுந்தான்தரித்து
பாக்குடனேவெற்றிலையும் பாங்காகத்தான்வாங்கி
மாதிகச்சின்னானை வந்துகண்டேயந்நேரம்
பொம்மியம்மாள்காவலுக்குப் போகவிடைதாருமையா
அப்படியேபோய் நீ அனுதினமுங்காவல்செய்வாய்
என்றுசொல்லக்கேட்டு எத்தமுள்ளதென்மதுரை
நடந்தான்காண்வீரயனும் நாலுதிக்குந்தானதிர
சிங்காரத்தோப்பைச் சீக்கிரமாய்த்தான்பார்க்க
அலங்காரத்தோப்பில் அச்சமுற்றுத்தான்சேர்ந்தான்
பைங்கிளியாள்தன்குடிசை பக்கமேபோய்ச்சேர்ந்தான்
அந்தநேரவேளையிலே ஆரணங்குபொம்மியம்மாள்
குடிசைவிட்டுவந்து கொப்பெனவேதான்பார்த்து
தென்மதுரைநிற்கிறதை தேன்மொழியுங்கண்டாளே
நிற்கிறதைக்கண்டு நெடுநேரமெய்மறந்து
ஆரோதெரியாது அர்த்தராத்திரிவேளைதனில்
மாதிகனல்லவிவன் மாற்றானுக்கானதென்று
ஆடாநிற்கிறவன் அஞ்சாமல்சொல்லிடுவாய்
ஆரோவெனச்சொல்லி அஞ்சாதேமங்கையே நீ
மாதிகச்சின்னான்பெற்ற மைந்தன்தானனென்றான்
நல்லதென்றுசொல்லி நடந்தாள்குடிசைக்குள்
பைங்கொடியாள்போய்ப் படலெடுத்துச்சாற்றியபின்

கட்டிலின்மீதிருந்து கட்டளைகள்சொல்லுகிருள்
பத்திரமா நீயும் படுத்திடாவென்றுசொன்னுள்

மதுரைவீரன் பொம்மியம்மாளிடஞ் சேருதல்.

மதுரையன் தான்கேட்டு வகையுடனேபேசலுற்முன்
போட்டதொருகட்டிலில்போய்ப்படுத்தாய்பெண்ணே
ஒண்டியொருவனுமா யுட்கார்ந்திருப்பேனே
மங்கையரேநானும் மழையில்நனைகிறதா
ஆண்பாவம்பொல்லாது அதட்டினுல்தோசமடி
இருட்டிலொருவனுமா யிருப்பேனேபெண்ணரசே
குடிசைக்குள்வரவழைத்தால் கோடிதர்மமுண்டுனக்கு
இவ்வார்த்தைகேட்டிருந்த ஏந்திழையாள்கூறுகின்ருள்
சக்கிலியப்பயலுக்குத் தலைப்புழுகு ஆடுகுது
எகுத்தாளம்பேசி எடுத்துரைக்கவந்தாயடா
காவல்செய்யவந்தாயோ கற்பழிக்கவந்தாயோ
என்னபிதற்றுகிருய் எழுந்திருந்துபோடா நீ
கூவென்ருல்கேட்டுக் கோடிபடைவந்துவிடும்
உத்தனையும்வெட்டி உயர்கழுவில்போட்டிடுவார்
பையலென்றுபேசாதே பதைக்குதடியென்மனது
தலைவெட்டிப்போனுலும் சக்கிலிநான்விடுவதில்லை
உத்தனையும்விட்டெந்த னுயிர்தானும்போகாது
ஈரத்தில்நின்ருல் என்னுடம்புக்காகாது
எந்தனுட நீயும் இசைவாகத்தான்கூடி
குடிசைக்குளெனையழைத்துக் கூடினுலுந்தனுக்கு
கோடிதருமமுண்டு கோதையேநம்படி நீ
சக்கிலியனுனுலுந் தனஞ்சயனுனவேண்டி
கன்னியேகொஞ்சநாளில் காட்டுகிறேன்சவுரியத்தை
இந்தநல்லவேளைதனி லிருவருமேகைகலந்து
மருவியிருவருமாய் மங்கையரேபெண்மயிலே
காமவிகாரங் களையாய்வருகுதடி
மன்மதபாணம் மார்பில்வந்துலைக்குதடி

பஞ்சணைமெத்தையின்மேல் பக்கத்திடங்கொடுத்து
இருவருமாய்க்கூடி இருப்பமடிபெண்ணரசே
கூடியிருந்தோமானால் கோதையே நீதானும்
சந்தனங்கஸ்தூரி தான்பூசிவாழ்ந்திருப்பாய்
பாலபழமுஞ்சர்க்கரையும் பசியாமலுண்டிருப்பாய்
வெற்றிலையும்பாக்கும் விதவிதமாய்த்தானுகர்வாய்
ஏதேதுகேட்டாலும் எடுத்துவந்துநான்தருவேன்
மங்கையேநான்கேட்கிறது உன்மனதுமுருகலையோ
கல்லுங்கரையுமடி கடலுமுருகுமடி
உன்வடிவுக்கேற்ற உத்தமனும்நான்தாண்டி
எதுக்குமஞ்சாதே இளமயிலேபெண்ணணங்கே
இப்படியாகஇன்பமுடன் கேட்கையிலே
பேடைமயில்போல்பெண்ணணங்குகேட்டிருந்து
எண்ணுதுமெண்ணி யேங்கியழுகலுற்றாள்
ஈஸ்வரனேயென்தலையில் என்னவெழுதிவிட்டாய்
கன்னிகழியாமல் கல்யாணம்செய்யாமல்
சக்கிலியன்கற்பழிக்கத் தலையிலெழுதினையோ
என்றுசொல்லிக்கன்னியரு மேங்கிமுகம்வாடி
முத்துப்போல்கண்ணீரை முகமெலாஞ்சோரவிட்டாள்
பவளம்போற்கண்ணீரைப்பக்கமெலாம்சோரவிட்டாள்
அழுதுமுகம்வாடி அவளிருக்கும்குடிசைக்குள்
மண்டியிட்டுத்தானுழைந்து மடிமேலுட்காரவைத்து
மங்கையரைத்தானும் மார்போடுதானணைத்தன்
எத்திழையேயுந்தனுக்கு என்னவிசாரமடி
ஆரென்றிருக்கிறாய் அருங்கிளியேபெண்மயிலே
காசிராஜன்பெற்ற கருத்துள்ளவீரனடி
மகிமைதெரியாமல் மயங்குகிறாய்பெண்மயிலே
என்றுசொல்லித்தானும் எடுத்தவளைக்கண்துடைக்க
மங்கையரும்பார்த்து மனமுங்குளிர்ந்தாளாம்
தெளிந்துமுகமலர்ந்து தேன்மொழியாளப்போது

கண்குளிரப்பார்த்துக் கன்னிகையுமேதுசொல்வாள்
முன்னழகும்பின்னழகும் மூவுலகில்கிட்டாது
மார்பழகைக்கண்டால் மயங்குவார்கோடிபெண்கள்
உருமாலின்கட்டழகும் உத்திராட்சந்தன்னழகும்
சந்தனங்கஸ்தூரி தானணிந்தான்மங்கையற்கு
புனுகுசவ்வாது பொங்கமுடன்பூசலுற்றான்
மல்லிகைப்பூசெண்பகப்பூவரிசையாய்த்தான்தரித்தான்
உத்தரியந்தானெடுத்து உத்தமிமேல்தான்தரித்தான்
மங்கையருமப்போது மனமகிழ்ந்துகட்டிலின்மேல்
என்னைவலதழிக்க எத்தனைநாள்காத்திருந்தாய்
மகாதேவாருளினால் மண்பிடித்தவேளையிலே
மன்னவனேயெந்தனுக்கு வளர்ந்தீரோபூமிதனில்
என்றுசொல்லித்தானகைத்து இசைவானகன்னிகையும்
அடைக்காயும்வெற்றிலையும் அன்பாகமுன்புவைத்தாள்
பாக்கிலையுந்தானருந்திப் பரிந்துவிளையாடினார்கள்
காமவிகாரங் கண்ணைமறைத்ததிப்போ
மன்மதபாணம் மார்புருவிப்போகையிலே
தோகையணிந்த துகிலாடைதான்களைந்து
மங்கையரைத்தானணைந்தான் மாணிக்கக்கையாலே
கட்டியணைந்தான் கனிவாயைமுத்தமிட்டான்
முகத்தோடுமுகம்வைத்து முத்தமிட்டாரிருவருமாய்
கந்தருடன்வள்ளியம்மை கைகலந்தபாவனைபோல்
பார்வதியாள்தன்னுடனே பரமசிவன்சேர்ந்ததுபோல்
கூடிமகிழ்ந்து குலாவிவிளையாடினார்கள்
மதுரைமகாவீரன் மங்கையுடன்தான்சேர்ந்தான்
இப்படியாக இருந்துவிளையாடினபின்
கட்டில்விட்டுத்தானிறங்கிக் கன்னிகையுமப்போது
புருஷனேதெய்வமென்றுபொற்கொடியுந்தானினைத்து
தென்மதுரைவீரனுக்குத் தெண்டனிட்டுநிற்கையிலே
மன்னவனுமப்போது மங்கையரைத்தானெடுத்து

காலில்விழுந்த காரணத்தைக்கேட்கலுற்ருன்
பெண்ணாசிவாய்திறந்து பிரியமுடன்சொல்லுகிருள்
மானிடவர்தானே மகாதேவர் நீர்தானே
எவ்வுலகராசாவோ ஈஸ்வரனுர்தன்மகனே
ஆர்பெற்றகண்மணியோ அரிவையற்குக்கூறுமென்ருள்
மாதிகன் வீட்டில்வந்தவகையதனைச்சொல்லுமென்ருள்
தாய்தகப்பன்பேருந் தனஞ்செயனேசொல்லுமென்ருள்
மதுரையான்வந்தவகை மங்கையரேசொல்லுகிறேன்
கைலாசநாதர் கடாட்சத்தின்தன்னுலே
காசிமகாராஜனுக்குக் கண்மணியாய்நான்பிறந்தேன்
மாலையுடன்பிறந்தேனென்றுவனத்திலேபோட்டார்கள்
வனத்திலிருந்தவென்னை மாதகியெடுத்துவந்தாள்
சக்கிலியன்வீட்டில் வளர்ந்தவண்டிகையலரே
என்றுசொன்னசொற்கேட் டினிதாய்மனமகிழ்ந்து
பொழுதுவிடிகிறது போய்ப்பிழையுமன்னவனே
நாளைப்பொழுதுவந்து நாகரீகம்பேசுவீர்காண்
இப்படித்தானு மிருக்குமந்தவேளையிலே
கங்குல்விடிந்து கதிரோனும்வந்துதித்தான்
தேன்மொழிகுடிசைவிட்டுச் சீக்கிரமாய்வெளியில்வந்து
கிழக்குமுகமாயிருக்கும் கிணற்றருகேதானடந்து
கால்கைமுகஞ்சுத்திசெய்து கனிவாயுங்கொப்பளித்து
சிவசிவாவென்று திருநீறுதானுமிட்டு
அரகராவென்றுசொல்லி ஐயனையுந்தான்தொழுது
கோதைமயிலணையாள் குடிசைக்குள்தானுழைந்தாள்
மதுரைவீரன்தானும் மாதிகன்வீடுபோனுன்
மாதிகனுமோடிவந்து மைந்தனைத்தான்தழுவி
இந்நேரமென்னசெய்தாய் எந்தனதுகண்மணியே
மழையில்நனைந்ததினுல் மறந்துநான்தூங்கிவிட்டேன்
நல்லதென்றுகூட்டிப்போய் நலமுள்ளமாதிகனும்
மங்கையரோபெண்ணே மைந்தனுக்கனமிடு

மாதாமனமகிழ்ந்து வட்டில்விளக்கிலவைத்து
சம்பாஅரிசி சமைத்தசாதம்படைத்து
தயிரொடுத்துவார்த்துத் தயவாய்ப்புசியுமென்றுள்
வற்றல்வடகம் வகையுடனேயூறுகாய்
கூட்டியமுதுண்டான்குணமுள்ளவீரனுமே
உண்டுபசியாறி உத்தமனும்வீற்றிருந்தான்
கங்குல்வருமுன்னே கதிரோனும்போய்மறைந்தான்
இன்றையகாவலுக்கு என்மகனேபோய்வருவாய்
நல்லதென்றுவீரையனும் நடந்தானேயப்போது

மதுரைவீரன் பொம்மியம்மாளுக்குத் தாலிதரித்தல்.

பொன்னுபரணமெல்லாம் பூட்டியலங்கரித்து
ஆயுதமெலாமெடுத்து அரிவாளுங்கைப்பிடித்து
பார்த்தபேர்மோகிக்கப் பஞ்சவர்ணப்பொட்டுமிட்டு
மங்கைக்குத்தான்தரிக்க மங்கிலியங்கைக்கொண்டு
நாடிக்குடிசைதனை நடந்தானேவீரையனும்
மங்கைக்குடிசைதனில் மன்னவனும்வந்துநின்றான்
காரிகையுமப்போது கண்டுமனமகிழ்ந்தாள்
ஆறுனும்பெண்ணரசே அன்பாகச்சொல்லுகிறேன்
மங்கிலியம்கட்டாமல் மாதேயுனையணைந்தேன்
மங்கிலியஞ்சூட்ட மகிழ்ச்சியாய்வந்தனடி
இந்தசொற்கேட்டு ஏந்திழையாளப்போது
கழுத்திலேமங்கிலியங் கண்டதேயுண்டானல்
அம்மான்மார்கூடி யறுத்துப்பகைதொடுப்பார்
என்தகப்பன்தானும் இருதுண்டாய்வீசிடுவான்
இப்படியாக ஏந்திழையுஞ்சொல்முடித்தாள்
எதுக்குமஞ்சாதே யிளங்கொடியேபெண்மயிலே
ஆதிசிவன்பார்வதியும் ஆதிநாராயணனும்
முப்பத்துமுக்கோடி முனிவர்களுந்தேவர்களும்
ஆனூர்திருமகனும் ஆனைமுகப்பிள்ளையாரும்
எல்லோரும்பார்த்திருக்க இந்தச்சிறுதாலிதனை

மஞ்சள்சாட்டில் வகைவகையாய்த்தான்கோர்த்து
சாணமெடுத்துவந்து சதுராகத்தான்மெழுகி
பிள்ளையார்தன்னைப் பெட்புடனேதானிருத்தி
அறுகுபிடிங்கிவந்து அன்பாய்விநாயகர்க்கு
புஷ்பங்கள் தூவியல்லோ போற்றிமிகத்துதித்து
பாதத்தின்முன்பாகப் பாங்கானதாலிதன்னை
வைத்துமிருவோரும் வணங்கியேதெண்டனிட்டு
சாம்பிராணித்தூபம் சதுராகத்தான்கொடுத்து
தேவர்களப்போது சிறப்பாகப்பார்த்திருந்தார்
அந்தநல்லவேளையிலே ஆண்சிங்கவீரையனும்
சாட்டுடனேதாலிதன்னைச் சாங்கமாய்த்தானெடுத்து
தேவர்களைநோக்கித் தெண்டனிட்டுவீரையனும்
சிவசிவாவென்றுசொல்லித் திருமங்கிலியந்தன்னை
தோகைநல்லாள்தன்கழுத்தில் சூட்டினானப்போது
அந்நேரந்தேவர்களு மலங்காரமாகவேதான்
பூமாரிதானும் பொழிந்தார்களக்கணமே
ஆணிமுத்துவீரையனும் ஆரணங்குபொம்மியரும்
இட்டமுடனெழுந்து தீர்க்கமுடன்தேவர்களை
அடிபணிந்துதெண்டனிட்டு அடவுடனேநின்றூர்கள்
ஆசீர்வாதஞ்செய்து யாவரும்வரமளித்து
பொன்னுலகவாசலிலேபோய்புகுந்தார்தேவரெல்லாம்
ஆணிமுத்துவீரையனை ஆரிழையாள்தான்பார்த்து
ஆதிசிவன்கர்த்தா அமர்ந்தசபைதானறிய
மங்கிலியத்தைத்தரித்த மைத்துனரேவாருமென்று
கட்டிலிலிருவருமாய்க் கைகோர்த்துத்தானிருக்க
சிரித்துவிளையாடித் தேன்மொழியைத்தானணைத்தான்
அணைத்துவிளையாடி ஆவலெல்லாந்தீர்த்தார்கள்
தீராதஆசையெல்லாம் தீர்ந்துமிருவருமாய்
வாருங்காண்மைத்துனரே வார்த்தைஒன்றுகேளுமென
முப்பதுநாளும் முடிந்ததுகாண் நாளையுடன்

நாளைக்குவிக்குடிசை நலமாகத்தான்பிடுங்கி
மாளிகைக்குத்தானழைக்க வருவார்காண்என்தகப்பன்
உன்னைவிட்டுநான்பிரிந்து உகந்துஇருப்பேனோ
இருவருமாய்க்கூடி இனிதாய்விளையாட
என்றைக்குத்தானமையும் எந்தலேசொல்லுமென்றாள்
நாளைக்கிழமைக்கு நான்வருவேனென்றுசொன்னான்
நாளைப்பொழுதில் நலமாகக்காண்பீர்காண்
அதின்பிறகுஎன்னையல்லோ யார்யார்க்கப்போரார்கள்
என்னைத்தவிர எவளுனக்குமாகாதோ
தேசத்தில்வேறொருபெண் சிக்காதோதேசிகனே
மண்டலத்தல்நான்தானோ மற்றொருபெண்கிட்டாதோ
என்குறிஞ்சிக்கோட்டைக்குள் இதமாகவந்திரென்றால்
கோட்டைக்குறிக்காரர் கொத்தளத்துச்சேவகரும்
மன்னவரோயுமக்கு வழிவிடத்தான்போராரோ
பத்துதலைவாசலுக்குப் பத்துலட்சங்கோடிமன்னர்
தொட்டியர்கள்காவல் துடுக்காயிருக்குமங்கே
வந்தாலுமும்மை வலுமையுள்ளதொட்டியர்கள்
கள்ளனென்றுதான்பிடித்துக் கைகாலைவாங்கிடுவார்
உயர்கழுவில்போட்டு உன்தலையைவெட்டிவைப்பார்
இந்தப்படிகாவல் ஏற்றமுள்ளதொட்டியர்கள்
பொல்லாதலண்டன் போக்கிரிகாணென்தகப்பன்
இப்படியெல்லா மிகழ்ச்சியாய்ச்சொன்னேனென்று
மன்னவரே நீர்தானும் மனவருத்தங்கொள்ளாதீர்
நடக்கும்வழிவகைகள் நானறிந்துசொன்னேன்காண்
என்னைமறவாமல் ஈடேற்றவேணுமென்றாள்
புண்ணியனேயும்மைவிட்டுப் பொருந்தேனரைநாழி
என்றுசொல்லிப்பொம்மியரும் ஏங்கியிகவாடி
என்னையும்விட்டு இருப்பீரோபூமியிலே
மன்னவரேயும்மைவிட்டு மண்மேலிருக்கேனென்று
தண்ணீரும்விட்டழுது கலங்கினாள்பொம்மியரும்

அதுகண்டுவீரையனு மழவேண்டாம்பெண்ணேஎன்று
கண்ணீர்தனைத்துடைத்துக் காவலனுமேதுரைப்பான்
உன்னைநான்கொண்டு ஊர்வழியேபோவேனடி
இருவரும்போய்பிழைப்போம் ஏற்றமுளபெண்ணரசே
தேறுதலைசொல்லித் தென்னவனுந்தானடந்தான்
அந்தநல்லவேளையிலே ஆனதொருமாதிகனும்
மைந்தனைத்தான்பார்த்து மாதிகனுமப்போது
முப்பதுநாளும் முடிந்ததுவிப்போது
ஆகையினலிப்போ ஆனதொருபொம்மியர்க்கு
காலுக்கிசைந்ததொரு கனத்தமிதியடியும்
மைந்தனேயுன்கையால் வளமாகச்செய்வதற்கு
மிதியடிக்கானதொரு வேணவகைரத்தினங்கள்
தங்கத்தால்சரிகைகளுந் தனிவயிரமுத்துகளும்
பொம்மணநாய்க்கர் புதல்விக்குவேணுமென்று
மிதியடியைத்தைக்க விரைவாகவென்கையில்
தந்தார்காண்ரத்தினத்தைத் தயவாகநீயெடுத்து
வாருகள்மேலே வகையாகத்தான்சமைத்து
இட்டமுடனீயுஞ் சீராகவையுமைந்தா
அந்தச்சொல்கேட்டு ஆணிமுத்துவீரையனும்
குட்டியாட்டுத்தோலை கொற்றவனுந்தானெடுத்து
அட்டைக்குவளமாக அட்டையுந்தான்சேர்த்து
அதற்கேற்றமேல்வாரு அடைவாகத்தானறுத்து
ஒருநாளிகைக்குள்ளே யுச்சிதமாய்மிதியடியும்'
கட்டியங்கேதானெடுத்துக் காரணனுமப்போது
தகப்பனையழைத்துத் தான்கொடுத்தான்வீரயனும்
பார்த்துமனமகிழ்ந்து பாலகனைக்கொண்டாடி
மாதிகனும்வாங்கி மனமகிழ்ந்துவைத்திருந்தான்

பொம்மியம்மாளை வீட்டிற்கழைத்துக்கொள்ளல்.

முப்பதுநாளும் முடிந்ததுகாணப்போது
பொழுதுவிடிந்தபின்பு பொம்மணநாயக்கனுமே

பொம்மியம்மாளுக்குப் பொருந்திசடங்குசெய்ய
கூட்டத்துடனே குடிசைக்குத்தான்வந்து
குடிசைபிடுங்கி கொழுத்திவிட்டபிற்பாடு
பொம்மியம்மாள்தன்னைப் பொங்கமுடன்நீராடி
கூறையுடுத்திக் கோலப்பணிபூட்டி
கொப்பிட்டுக்குந்தளக்கோலப்பொன்னோலையிட்டு
கருங்குருவிவாலதுபோல் கண்ணிற்குமையெழுதி
நெற்றியிற்றிலதமதை நேராகத்தானுமிட்டு
உட்கழுத்துத்தாலி யுயர்த்தியுள்ளகல்லிழைத்து
கட்டுவர்க்கந்தன்னுலே கழுத்திற்சரமணிந்து
மோகனமாலை முத்தாபரணமின்ன
மார்பில்பதக்கம் வகையுடனேதானணிந்து
சந்தோஷங்கொண்டு தானெழுந்து அந்நேரம்
கடகஞ்சரிபவளம் கைவளையல்தானணிந்து
பத்துவிரலுக்கும் பசும்பொன்னுல்கணையாழி
இடுப்பிலொட்டியாணம் இசைவாகத்தான்பூட்டி
காலாழிபீலாழி கனத்தசிலம்பணிந்து
பாடகம்தண்டை பாதசரம்பூட்டி
வங்கிதலைசாமான் வயிரத்தால்மார்பதக்கம்
பூரணமெல்லாம்பூட்டியலங்கரித்தார்
அந்தநல்லவேளையிலே யானதொருமாதிகனும்
மிதியடியைத்தானேந்திவிரைவாகக்கொண்டுவந்தார்
அந்ததொருபொம்மணனும் அன்பாகமிதியடியை
பொம்மியம்மாளுக்குப் புகட்சியாய்த்தான்கொடுத்தான்
மிதியடியைத்தான்பார்த்து வேலனையகண்ணாளும்
மதுரைவேலையென்றுமனங்குளிர்ந்தாளப்போது
தொட்டியத்துசக்கிலியர் அருசாகமொம்பூத
தப்பட்டைமேளம் தவில்முரசுதான்முழங்க
எருதுமேல்நகாரா எட்டுத்திசையதிர
புள்ளாங்குழலூதப் பேரிகையடித்துவர

நாகசுரமேளம் நாட்டியங்களாடிவர
பதினெட்டுமேளம் பாங்குடனேவாசித்து
வெடிசத்தமெங்கும் வேணபடிதானதிர
கட்டியர்களெச்சரிக்கை கட்டியங்கூறிவர
வாராளாம்பொம்மியம்மாள் வர்ணமணிமாளிகைக்கு
ஆலாத்திசுற்றும்பெண்கள் அன்னம்போல்நடந்துவர
பொம்மியம்மாள்தனக்குப் பொருந்துதிருஷ்டிகழிக்க
மூத்தாலே ஆலாத்தி மூவாயிரங்கோடி
மாணிக்க ஆலாத்தி வகைவகையாய்த்தானெடுத்து
திருஷ்டிகழித்தார்கள் தீங்கெல்லாம்விட்டோட
கட்டியங்கூறக் கவரிபணிவீச
மங்கைநல்லாள்பொம்மியரு மாளிகையினுட்புகுந்தாள்
அந்நேரவேளையிலே யானதொருபொம்மனும்
தையல்நல்லாளுக்குச் சடங்குசெய்யவேணுமென்று
வேதப்பிராமணரை விதியுடனேதானழைத்து
நல்லதினந்தானென்று நன்றாகப்பாருமென்றான்
சித்திரைமாதஞ் சிறந்தசிம்மலக்கினத்தில்
நல்லவேளையென்று நாலுபக்கங்கால்நாட்டி
சந்தனக்கையால் சதிர்முகக்கால்நாட்டி
பத்தரைமாற்றுப் பசும்பொன்கலசமிட்டு
செண்பகப்பூவரும்பால் சிறக்கவேமாலைகட்டி
மெல்லிநல்லாள்தானிருக்கும்மேல்கட்டுத்தொங்கவிட்டு
பச்சைக்கிளியும் பசும்பொன்கலசமிட்டு
தூணுக்குத்தூணு தூங்காவிளக்கெரிய
குத்துவிளக்கெரியக் குடவிளக்குநின்றெரிய
தப்பட்டைமேளம் தவில்முரசுதான் முழங்க
எக்காளமூத எங்குங்கிடுகிடென்ன
பாளயப்பட்டிலுள்ள பரிசனங்களத்தனையும்
துரைகள்துரைமக்கள் துரைராசமன்னவரும்
மங்கிலியப்பெண்கள் மங்கையர்கள்கூட்டமுடன்

வந்தவுறன்முறைக்கு வரிசையாய்ப்பொம்மணனும்
வச்சிரத்தால்மூக்காலி வரிசையாய்த்தான்போட்டு
பொம்மியரைக்கொண்டுவந்து பொங்கமுடனிருத்தி
சாஸ்திரஞ்சொன்னபடி சதிராகத்தான்முடித்து
அன்னையாம்பொம்மிதனையரண்மனைக்குகொண்டுவந்து
வந்தவுறன்முறைக்கு வரிசையாய்ப்பொம்மணனும்
சந்தனங்கஸ்தூரி தான்பூசியெல்லோர்க்கும்
பரிவுடனேயவனும் பாக்கிலையுந்தான்கொடுத்தான்

விருந்திடல்.

விருந்தங்களித்தார்கள் விகசிதமாய்க்கொட்டியற்கு
ஆயிரக்கலசம்பாவரிசி அுடைவுடனேதான்வடித்து
பதின்கலப்பருப்பு பாங்குடனேதான்சமைத்து
வாழைக்காய்பொரியல் வழுதலங்காய்ப்புளிச்சமையல்
பச்சடியில்நூறுவகை பாற்குழம்புந்தான்சமைத்து
மோர்க்குழம்பு ஆமைவடை முருங்கைப்பூகூட்டமுது
கிறையில்பத்துவிதம் கிரமமாய்த்தான்சமைத்து
பலவகைப்பதார்த்தங்களும் பண்பாகத்தான்சமைத்து
அதிரசம்பேணி அதிசயமாகச்சமைத்து
போளிசுகியன் பொங்கமுடன்செய்து
லட்டுஜிலேப்பி லட்சணமாகச்செய்து
காராசேவ்பூந்தி கனத்தகற்கண்டுடனே
சர்க்கரையினுல்பதுமை சாங்கமுடன்செய்து
வடையப்பளமும் வகைவகையாய்த்தான்செய்து
இட்டலிதோசை யினிப்பானகாரமுடன்
அன்பாகத்தான்செய்து அளவில்லாப்பலகாரமுடன்
வாழைப்பலாக்கனியும் வண்மையுள்ளமாங்கனியும்
தேனுடனேசர்க்கரையும் தெவிட்டமேதான்போட்டு
புத்துருக்குநெய்யும் பொங்கமுடன்வார்த்து
பால்விட்டபாயசமும் பத்துவிதமுந்தான்செய்து
இத்துடனேகூட எற்றகறிவகைகள்

வேணபடிசெய்து விதவிதமாய்த்தான்சமைத்து
பந்திபரிமாறி பாங்காகவிசாரித்து
உறன்முறையோரெல்லாரும் உண்டுபசியாறி
கைகாலலம்பிக் கனிவாயைக்கொப்பளித்து
வந்துவுட்கார்ந்தார்கள் வண்மையுள்ளபந்தலிலே
சந்தனமும்புட்பமுந் தயவாயவர்க்களித்து
அடைக்காயும்வெற்றிலையும் அன்பாகவேயளித்தார்
வால்மிளகுஏலக்காய் வண்மையுள்ளசாதிக்காய்
ஜாதிபத்திரிகிராம்புடனேசப்பிரமாய்த்தான்கொடுத்து
அருகிலிருந்து அனைவரையும்பூசித்தார்
இப்படியாக இருக்குமந்தவேளையிலே
மாதிகச்சின்னானும் வண்மையுள்ளவீரனுமே
சாதங்கரிவாங்கத் தான்வாராரந்நேரம்
பொம்மணநாயக்கரும் பெருமையுடனேபார்த்து
ஆரடிதாதிகளே அன்னம்படையுமென்றார்
படையுமென்றசத்தம் பைங்கிளியாள்தான்கேட்டு
ஆரென்றுசொல்லி அலறியெழுந்திருந்தாள்
தாதியுமப்போது சக்கிலியனென்றுசொன்னாள்
சாதங்கறியுடனே தட்டில்பரிமாற
கொண்டுவாவென்று கூறலுற்றாளப்போது
தாதியருமன்னடக்கத் தையலருங்கூடவந்து
மாதிகர்க்குப்பெண்ணரசி வாரியமுதிட்டாள்
மதுரைநல்லவீரையனை மங்கையருந்தான்பார்த்தாள்
தகப்பனுடன்கூட தன்மனைக்குப்போய்ச்சேர்ந்து
நடுராத்திரியில்வீரனுமேநல்லணங்கைத்தானினைந்து
மைந்தனென்றுதான்வளர்த்த மாதிகர்க்குங்கூறுமல்
பதினைந்துநாழிகையில் பள்ளியறையைவிட்டு
சர்வாபரணமெல்லாந் தானணிந்தானப்போது
மாளிகையைவிட்டு வாரான்காவலுடன
பொம்மிமேலாசைகொண்டு புறப்பட்டான்வீரனுமே

கொள்ளைகொண்டவீரனுமே கோட்டைக்குமுன்வந்து
அனுமந்தலகுவெடுத்து அதிரக்குதித்தான்காண்
பத்துகட்டுவாசலையும் பாங்காகத்தான்கடந்தான்
பொம்மியர்க்குக்காவலாய்ப் பொம்மனுமப்போது
உருவினகத்தியுட னுறங்கினன்பொம்மணனும்
இத்தனைகட்டுதிட்டமாயிருந்து நப்மையென்செய்வார்
என்றுசொல்லித்தான்சிரித்து ஏற்றமுள்ளவீரையனும்
ஈயைப்போல்வடிவெடுத்து யிறப்பிலேபோய்நுழைந்து
பேள்ளநுவழந்துபோய் மெல்லியரைத்தானெடுத்து
தேன்மொழியாள்பொம்மி திடுக்கென்றெழுந்திருந்து
கணவனைக்கண்டவுடன் கன்னியரும்பூரித்தாள்
கட்டியணைத்துக் கனிவாயைமுத்தமிட்டு
இருவருந்தான்தழுவி யிருந்தார்கள்பஞ்சணைமேல்
தென்மதுரைவீரையனைத் தேன்மொழிதான்பார்த்து
அங்கங்கேகாவல் ஆனதொருசேவகரும்
தொட்டியர்கள்காவல் துடுக்கானக்காவலங்கே
மாளிகைவாசலிலே மன்னவாயென்தகப்பன்
உருவினகத்தியுடன் உன்மாமன்தானிருக்க
இந்தப்படிகாவலிலே எப்படி நீர்வந்திரென்றாள்
கேளடிபெண்மயிலே கிரீடிக்கிறாயிதற்காக
எந்திழையேவுன்னைவிட்டு இருக்கேனைநாழி
அரண்மனையில நீயிருந்து அவ்விடத்தில்நானிருந்தால்
ஏகாந்தமெங்கேயடி இருவருக்கும்பெண்ணரசே
ஆசையினாலே ஆரணங்கேயுனைநினைந்து
கட்டுடன்காவல் கடந்துவந்தேனென்சமர்த்தால்
வாருமடிபெண்ணே வையகத்தில்போய்பிழைப்போம்
தெற்கேவெகுதூரம் திருச்சிராப்பள்ளியொன்று
இருக்குதடிபெண்மயிலே இருவரும்போவோமென்றார்
நல்லதென்றுசொல்லி நலமுள்ளமங்கையரும்
மாணிக்கப்பெட்டியை வகையுடனேதான்திறந்து

செலவுக்கோராயிரம்பொன் சீக்கிரமாய்த்தானெடுத்து
ஒற்றைக்கால்கூடாரம் ஓங்கவேதானெடுத்து
அத்தனையுந்தானெடுத்து ஆரணங்கும்மன்னவனும்
போகவேணுமென்றுசொலிப் புறப்பட்டாரிருவருமாய்
கதவைத்திறந்தவுடன கன்னிகையுங்காளையரும்
மாளிகையைவிட்டுத் தலைவாசலிலேவந்துநின்று
திறந்தக்கதவைச் சேரவேதான்மூடி
காளிதன்னையழைத்துக் காவலிருக்கச்செய்து
தாப்பாளும்போட்டுத் தப்பாமல்பூட்டிவிடு
என்றுசொல்லிவீரையனும் இதமாகநீரெடுத்து
மந்திரித்துப்போட்டு மன்னவனுமப்போது
பொம்மணனேறும் புரவிதனையவிழ்த்து
தங்கக்கடிவாளம் தாராளமாய்ப்பூட்டி
பத்தரைமாற்றுப் பசும்பொன்னுல்சீனிகட்டி
கூடாரத்தைமடித்துக் குதிரையின்மேல்போட்டு
பட்டாபெரியகத்திப் பாங்குடனேதானெடுத்து
பொன்புரவிமேலே பொம்மியைத்தூக்கிவைத்து
கடிவாளங்கைபிடித்துக் காரணனுமேறலுற்றான்

மதுரைவீரனும் பொம்மியம்மாளும் திருச்சினாப்பள்ளிக்குப் புறப்படல்.

கோட்டைகடந்தான் கொள்ளைகொண்டவீரையனும்
கொல்லிமலைகடந்து கோனேரியாறுவிட்டு
ஆமூர்வழியாக ஆற்றில்வந்துதானிறங்கி
நாட்டினன்கூடாரம் நட்டாற்றில்வீரையனும்
பலகாரஞ்சாப்பிட்டுப் பள்ளிகொண்டாரிருவருமாய்
ஏகாந்தம்பேசி யிருக்குமந்தவேளையிலே
பொழுதுவிடிந்தது பொம்மணனுமப்போது
பட்டத்துப்புரவியையும் பட்டத்துகத்தியையும்
[illegible]ததினாலே கலக்கமுற்று அந்நேரம்
[illegible]மியம்மாளைப் புகழ்ச்சியாய்க்கூப்பிட்டான்

பார்த்துமகளில்லையென்று பதறிவிழுந்தான்காண்
பொம்மியனைக்காணேமென்று புலம்பிவெளியில்வந்து
வேதியர்கள்சொன்னதெலாம் மெய்யாச்சுதென்றனே
பட்டணத்திலுள்ள பரிசனங்களத்தனையும்
இக்குத்திசைகளெல்லாம் தேடித்திரிகையிலே
மாதிகச்சின்னானு மகனையுங்காணேமென்று
எதிராகவந்தான்காண் எண்ணமற்றசக்கிலியன்
எல்லோரும்பார்த்து எடுத்துரைப்பாரந்நேரம்
மாதிகன்மகன்தானு மங்கையனைக்கொண்டுசென்றான்
என்றுசொல்லிநாய்க்கருக் கெடுத்துரைத்தாரந்நேரம்

மதுரைவீரன்மேல் பொம்மணன் படையெடுத்தல்.

சேனைகளைக்கூட்டித் திரளாகப்போவதற்கு
பதினாயிரம்வெடிக்காரர் பாங்குடனேகூட்டமிட்டார்
வளைதடிசக்கரங்கள் வகையுடனேபாணுவங்கள்
சேனைகளையெல்லாந் திரளாகத்தான்கூட்டி
அந்தநல்லவேளையிலே ஆனதொருபொம்மணனும்
வாகுவலயமும் வளைதடிசக்கரமும்
எரியம்புநெரியம்பு மீட்டிறங்கைபிடித்து
வேணவிருதுகளும் விதம்விதமாய்த்தானெடுத்து
பஞ்சகல்யாணிப்புரவி பாங்காகக்கொண்டுவந்தார்
பொம்மணநாயக்கன் புரவிதனிலேறி
தலையாரிமுன்போகத் தனிப்பரியும்பின்துடர்ந்து
சேனைவருவதினால் செந்தூள்பறக்குதங்கே
தப்பட்டைகொம்பு தவில்முரசுமுழங்கிவர
யானையின்மேல்பேரிகை யதிர்ந்துமுழங்கிவர
வழியிலெதிராக வருவோரைக்கேட்கலுற்றார்
ஒற்றைக்குதிரை ஒருபெண்ணுமாண்பிள்ளை
கண்டாயேயிவ்வழியில் கண்மணியேதம்பியரே
அப்போது ஆட்டிடையன் அவன்கண்டசேதிதனை
வாருமையாசுவாமி வந்தவகைசொல்லுகிறேன்

கருங்கால்வழியாய்க் கண்டேனொருகுதிரை
குதிரையின்மேலேயொரு கோதையருமனனவனும்
இவர்களிருவருமாய் இதமாகப்போறார்கள்
அந்தநல்லசேதிதனை அடைவாகத்தான்கேட்டு
பொம்மணனுமப்போது போகிறான்வேகமுடன்
கருந்தூளுஞ்செந்தூளுங் கலந்துபறக்குதப்போ
காவேரியாற்றில் கண்டானேகூடாரம்
அதிலிறங்கிச்சேனை அலைகொட்டிவருகிறதை

மதுரைவீரனும் பொம்மியம்மாளும்
கூடாரம் அடித்து இருக்கிறது.

கூடாரத்திலிருந்த கோதையரும்வெளியில்வந்து
வடக்குமுகம்பார்த்தாள் வருகின்றசேனைகளை
அலறியேபோய்விழுந்தாள் ஆணிமுத்துவீரயன்மேல்
என்னடிபெண்ணேயென்று எழுந்துவெளியில்வந்து
பார்த்தான்வடக்குமுகம் பறந்துவருஞ்சேனைகளை
கண்டுமெந்தவீரையனுங் கன்னிமனந்தேற்ற
கூடாரத்தின்மேலே கொள்ளைகொலையென்றுசொல்லி
வந்துநிறைந்தார்கள் வந்தசேனையத்தனையும்
பதினாயிரம்பேர்கள் பாங்குடனேஅம்புதொட்டு
கூவியதுபோல கோடியம்புதான்தொட்டு
வெட்டவேணுமென்று வீரன்மேல்வாரார்கள்
கண்டுமெந்தவீரையனுங் கடுங்கோபந்தானாகி
மீசைதுடிக்குதப்போ வெகுகோபங்கொள்ளுதப்போ
ஏறினார்குதிரையின்மேல் எடுத்தார்பெரியகத்தி
மன்னவனேயுங்கள் மாமனொருத்தனையும்

மதுரைவீரன் சண்டைக்குப் போகுதல்.

வெட்டாமல்விட்டுவரவேணுமென்றுதெண்டனிட
ஷபங்கிளியேபெண்மயிலே படுகளத்திலொப்பாரி
உண்டோவித்தேசத்தி லுண்மையைச்சொல்லவந்தாய்
[illegible]றுசொல்லிவீரனுந்தான் எதிராளிசேனையிலே

யானைத்திரள்களில் ஆளிவந்துபாய்ந்ததுபோல்
சேனைதளத்தில் சிறுவேங்கைபாய்ந்ததுபோல்
வந்துவளைந்தானும் மட்டற்றசேனைதனில்
சேனைகளெல்லாந் திரளாகவோடியங்கே
மாண்டுமடிகிறது மன்னனதுசேனையெல்லாம்
முன்வீச்சுக்காயிரம்பேர் முனைவீச்சுக்காயிரம்பேர்
இறந்துமடியுதப்போ எண்ணிறந்தசேனையெல்லாம்
பொம்மியால்நம்முயிர் போகுதென்றுசொல்லுவார்கள்
என்றுபுலம்பி இறந்துமடியுதப்போ
புஷ்பமாய்வந்து பொழியுதுகாணுண்டவன்மேல்
துடர்ந்துபோம்வீரன் துடிக்கப்படையையெல்லாம்
சாகிப்சலாமென்று தான்விழுந்தார்கோடிபடை
விஜயாங்கசொக்கலிங்கம் வேந்தனதுராணுக்களும்
கோட்டைக்கதவடைத்துக்கொத்தளத்தின்மேலிருந்து
வேடிக்கைபார்க்கிறார்கள் வேந்தன்படைத்தளமும்
சேனைத்தளங்களெல்லாஞ் சேதமாய்ப்போச்சுதென்று
மனதுகலங்கியப்போ மன்னவனுமேதுசொல்வான்
சக்கிலியன்தானுமிப்போ தலையறுத்தான்சேனைகளை
கூட்டப்படைகளெல்லாங் கொன்றுகருவறுத்தான்
நாம்போய்விழுந்து நறுக்குவோஞ்சக்கிலியை
என்றுநினைத்து ஏற்றமுள்ளபொம்மணனும்
புரவிதனிலேறிப் புறப்பட்டானப்போது
எதிர்கொண்டுவந்த எண்ணமுற்றமாமனைத்தான்
பார்த்துமங்கேபற்கடித்துப்பதறிப்போய்தான்விழுந்து
மாமனென்றும்பாராமல வாளாலேவீசிவிட்டான்
மாமன்விழுந்தபின்பு மதுரைமகாமுனியும்
தொட்டியப்பயல்களைத்தான் துரத்திக்கருவறுத்து
கத்திபரிசையெல்லாங் காவேரியிற்றுனலம்பி
கொள்ளைகொண்டவீரையனும் கூடாரந்தானேக்கி
குலுங்கநடைநடந்து குஞ்சிரிப்புகொண்டுவந்து

அடுத்தாரைக்காக்கும் ஆணிமுத்துவீரனுமே
வர்ணமணிகூடாரம் வந்திருக்கும்வேளையிலே
எந்திழையுமப்போது என்தகப்பனெங்கேயென்ருள்
உன்தகப்பன்தானும் ஒக்கமடிந்தாண்டி
என்றுசொல்லக்கேட்டு ஏற்றமுள்ளபொம்மியரும்
அலறியேபோய்விழுந்தா ளானதொருபடிகளத்தில்
பொம்மணன்மேலவிழுந்து புலம்பியழுகலுற்ருள்
என்னலேஉங்களுயிர் எமலோகஞ்சேர்ந்ததோ
பாவிமகளாலே படிகளத்தில்மடிந்தீரோ
என்னைவிட்டுநீங்கள் இருந்தரசு ஆளாமல்
சேனைதளத்துடனே சீக்கிரமாயாற்றில்வந்து
மடிந்தீரோமன்னர்களே மகாசேனையத்தனையும்
என்றுபுலம்பி ஏங்கியழுகலுற்ருள்
மங்கையலைந்தானெடுத்து மார்போடேதானணைத்து
அழுகிறதைத்தானமர்த்தி அந்நேரம்வீரனுமே
திருச்சினப்பள்ளியிற்போய்சீக்கிரமாய்கட்டைகொண்டு
சந்தனக்கட்டையின்மேல் சதுராயெடுத்துவந்து
நீர்க்கடனுந்திக்கடனும் நீதியுள்ளமாமனுக்கு
வரிசையுடனேமுடித்து மனமகிழ்ந்துவீரனுந்தான்
காவேரிதீர்த்தத்தில் கனமாகத்தான்குளித்து
மங்கையரும்வீரையனும் வந்தார்கள்கூடாரம்
சாதங்கறிவகைகள் சமைத்தாராமந்நேரம்
படைத்தசாதத்தை பரிவாகவீரனுண்டு
பைங்கிளியைப்பார்த்து பசியாறும்பெண்ணேஎன்ருன்
உண்டுபசியாறி உத்தமியாள்பொம்மியரும்
இருந்துங்கூடி ஏகாந்தமாயிருந்து
...கிலதானருந்திப் பரிந்துவிளையாடி
...ர்...கலம்மியரே இங்கிருக்கக்காரணமேன்
...ந்வுபிடுங்கிக் கோட்டைக்குப்போவோமென்று
...வீரனுந்தான் புரவிதனிலேறி

திருச்சினாப்பள்ளிக்குச் சீக்கிரமாய்ப்போகையிலே
கோட்டைதலைவாசல் குறிக்காரர்தாமறிந்து
எந்தவூரென்று இதமாகத்தான்கேட்டு
வடக்கேயிருந்து வருகிறோமென்றுசொல்லி
சேவகமில்லாமல் செம்மையாயிங்குவந்தோம்
நல்லதென்றுசொல்லி நாய்க்கருக்கறிக்கையிட
விஜயரங்கசொக்கலிங்க வேந்தனதுகேட்டு
வந்ததொருசேவகனை வாசல்தடையில்லாமல்
கூட்டியிங்கேவாருமென்று குணமாயனுப்பிவைத்தார்
வீரனதைக்கேட்டு விருப்பமுடனேநடந்தான்
பொம்மியம்மாளுக்குவிடுதி பொங்கமுடனேயமர்த்தி
விடுதியில்விட்டு வேந்தனிடந்தான்போனார்
கண்டுதுரைராசாவும் காரணனைத்தான்பார்த்து

விஜயரங்க நாய்க்கரிடத்தில் மதுரைவீரன் சப்பளத்துக்குப்போய் அமருதல்.

வாங்களென்றுசொல்லி வரிசையுடனிருத்தி
எந்தவூரெங்குவந்தீர் எனக்கறியச்சொல்லுமென்றார்
வடதிசையில்நானிருந்து வந்தேனையாஉங்களண்டை
ஆனதொருசேவகத்தை அடைவாகத்தந்திரானால்
அரண்மனைவாசலிலே அசையாமற்காத்திருப்பேன்
என்றுசொல்லிவீரனுக்கு ஏத்தமுள்ளராசாவும்
என்னதான்சம்பளம் ஐயம்பென்றுதான்கேட்க
திங்களுக்கோராயிரம்பொன் திறமாகத்தரவேணும்
நல்லதென்றுசொல்லி நாய்க்கனுஞ்சம்மதித்து
ஆயிரஞ்சேவகற்கு அணித்தலைவனாகயிரு
உச்சிதமான வுடுப்புகள்தான்கொடுத்து
இந்தப்படிவீரன் இருக்குமந்தவேளையிலே
யானையின்மேலேறி கோட்டைசுற்றிவருகி, றைக்கி
குதிரையின்மேலேறி கோட்டைசுற்றிவருகிது
ஆருமறியாமல் அரண்மனைக்குப்போகிற

வேடங்கள்பூண்டு வீதிசுற்றிவருகிறதும்
பதிவிரதைப்பெண்களை பதியைக்குலைக்கிறதும்
ஸ்ரீரங்கநாயகரைச் சேவித்துவருகிறதும்
வேட்டைகளாடி விடுதிவந்துசேர்கிறதும்
இப்படியாக இருக்குமந்தவேளையிலே
விஜயரங்கசொக்கலிங்க வேந்தன் துரைராசன்மெச்சி
தேசக்குறிக்காரன் கிருஷ்ணப்பநாய்க்கருந்தான்
பிள்ளைகளில்லையென்று பெருந்தவசுதானிருக்க
மாயனருளாலே வந்துதித்தாள்மங்கையரும்
புத்திரிபிறந்தவுடன் பூரித்துதானிருந்து
வேரோரரண்மனையை விசித்திரமாய்காட்டிவைத்து
மங்கையவ்வரண்மனையில்மகிழ்ச்சியாய்த்தானிருந்தாள்
அரண்மனைக்குப்போக ஆணிமுத்துவீரனுந்தான்
வருகிறபோது மருந்துபொடிவாசனையும்
வீசுவதைக்கேட்டு வில்லனையகண்ணனும்
ஆரென்றுசொல்லி அவளெட்டித்தான்பார்த்தாள்
கன்னியிளமயிலே கண்டானேவீரனுமே
ஆகட்டுமென்றுசொல்லி அதட்டியேதானுந்தான்
கண்டாளேவீரன்தனைக் களிப்புடனேசொக்கியவள்
மோகித்தபெண்மயிலாள் முத்தையன்மேலிச்சையொடு
அன்னம்விரும்பாமல் அடைக்காயருந்தாமல்
எண்ணங்கொண்டேமிகவும் ஏங்கியவளிருக்க
பொம்மியருமப்பொது போசனங்கள் தான்படைக்க
சாப்பிட்டிளைப்பாறி தனிச்சிங்கவீரனுமே
நஞ்சுதின்றுநஞ்சுறுக்கும் நடுச்சாமவேளையிலே
பகற்காலந்தான்பார்த்து பாவையரைத்தானினைந்து
...ர்...கயைவிட்டெழுந்து பாவையரண்மனையில்
...ரந்வாசல் அரண்மனைவாசல்கண்டு
...கடந்து எந்திழைவீடேறிவந்து
...வந்தான் எதிராகநிற்கையிலே

நாய்க்கர் மகள் தானும் நல்ல நித்திரைசெய்கையிலே
மதுரைவீரனணிந்த வாடையவள்மேல்வீச
பள்ளிகொண்டுதானிருக்கு பைங்கிளியாள்தான்பார்த்து
இந்தப்பொடி வாசனை யேதுகாணென்றுசொல்லி
காலையில்கண்ட காரணனும்வந்தானோ
ஆரென்றுசொல்லி யறிந்துவாவேனுமென்று
பஞ்சணைமெத்தைவிட்டு பைங்கிளியாள்தானெழுந்து
மாணிக்கப்பொற்கதவை மங்கையரும்போய்திறந்து
பார்க்குமளவில் ஆணிமுத்துவீரனிற்க
கண்டுமனமகிழ்ந்து கன்னிகையுமப்போது
மணவாளன் நிற்கிறதை மங்கையவள்தான்பார்த்து
மயங்கியேதான்விழுந்தாள் மங்கையவளப்போது
மாணிக்கமையாலே மங்கையரைத்தானெடுத்து
கற்பூரமையெடுத்து கன்னியர்க்குத்தானுமிட
சோகந்தெளிந்து தோகையருங்கூறலுற்றாள்
வாருங்காண் ராசாவே வார்த்தைசொல்லக்கேளுமினி
என்றுசொல்லத்தானு மேந்திழையாளருகில்வந்தாள்
கட்டியணைத்துக் கனிவாயைமுத்தமிட்டாள்
அடைக்காயும்வெற்றிலையும் அன்புடனேதானருந்தி
சிரித்துவிளையாடி தேன்மொழியைதான்சேர்ந்து
தீராத ஆசையெல்லாம் தீர்த்துகளித்தபின்பு
மங்கையருமப்போது மகிழ்ச்சியாயெழுந்து
வீரையனுக்குத்தானும் வேண்டுமென்றபலகாரம்
அதிரசமுந்தேன்குழலும் ஆனசுகிவடையும்
அவுரிச்சரக்கு தேசத்துச்சாராயம்
அத்தனையுங்கொண்டுவந் தாண்டவற்குமுபுவைத்தாள்
இத்தனைநேரம் இன்பமுடனேயிருந்தீர்
பசியாறுமென்றுசொல்லி பைங்கிளியுந்தான்கூறக்கி
தென்மதுரைதானும் சீக்கிரமாய்த்தான்புசித்து
அடைக்காயும்வெற்றிலையும் அன்புடனேத

வாருமடிபெண்ணரசே வார்த்தைசொல்லக்கேளுமினி
என்றுசொல்லிவீரையனுமேந்திழையைக்கேட்கலுற்று
பெண்மயிலேநானும் போகிறேனரண்மனைக்கு [ன்
என்றுசொல்லித்தானும் எழுந்துநின்றாப்போது
எப்போவருவீர்காண் என்றுசொல்லிக்கேட்கலுற்றாள்
மாதமொருதினந்தான் மங்கையரேநான்வருவேன்
என்றுசொல்லிவீரையனும் இதமாய்வெளியில்வந்து
சுத்தாலேயேறி தாருசாய்க்குதித்திறங்கி
ஆணிமுத்துவீரையனும் அசைந்துநடைநடந்து
வருகிறான்பொம்மியிடம் மாணிக்கமாளிகைக்கு
வீரையனுந்தானும் விடுதிவந்துசேர்ந்தாலும்
பொம்மியருங்கண்டு பொங்கியேகோபங்கொண்டு
இன்னேரமட்டுநீ எங்கேபோய்வந்தீர்காண்
முறையும்வரிசையில்லே முழக்கமுள்ளமன்னவனே
பெண்டுகளைக்கண்டால் பேய்போல்பறக்கிறீர்காண்
பாதகரேயிதற்கோ பற்றிவந்தேனுன்பிறகே
என்றுசொல்லிபொம்மி யெடுத்தறிந்துபேசியபின்
எங்கிமுகம்வாடி யெண்ணியழுகலுற்றாள்
தண்ணிவெறிக்காரர் தனஞ்செயனுந்தானுமப்போ
இந்தசலிப்பேண்டி யேந்திழையேபொம்மியென்று
வாரியெடுத்து மார்போடேதானணைத்து
உன்னைவிட்டுநானு மொருவர்முகம்பார்த்ததில்லே
பைங்கிளியேயென்று பரவசமாய்ச்சொல்லியபின்
மனமுந்தெளிந்தப்போ மங்கையருந்தானெழுந்து
சாதங்கறிவகைகள் தயவாகத்தான்படைத்தாள்
சாப்பிட்டிளைப்பாறி தக்கோலந்தானருந்தி
சிரித்துவிளையாடி சீராகத்தானிருந்தார்
[illegible]கசொக்கலிங்க வேந்தன் துரைராசாவை
[illegible]க்கொண்டு காத்திருக்கும்வேளையிலே
[illegible]ராசனுக்கு மதுரையிலேதானிருந்து

வெள்ளித்தடிக்காரர் வீருனவுத்தரங்கள்
திருசாகத்தானெடுத்து தாதுவர்களப்போது
ஆசாரவாசல்வந்து அடைவுடனேகைதொழுது
உத்தரத்தைதான்கொடுத்தார் உத்தமரும்வாங்கியப்போ
வந்தவொருவுத்தரத்தை வாசித்துப்பாருமென்று
மதுரையருகாதம் வாழ்மதுரைமூக்காதம்
வைகைநதியும் வற்ருதபொய்கைகளும்
சொக்கரிடசன்னதியும் சொர்ணமணிக்கோபுரமும்
மீனுட்சிசன்னிதியும் வெண்முகத்தால்கோபுரமும்
புஷ்பவனமும் பொய்கைதாமரைக்குளமும்
இப்படியாயிருக்கும் எண்ணமற்றராச்சியத்தில்
தன்னரசுநாட்டுத் தனிக்காட்டுகள்ளரெல்லாம்
காட்டிலுள்ளகள்ளரெல்லாம் நலமாகக்கூட்டமிட்டு
அழகர்தன்கோவிலுக்கு யாரொருவர்போனாலும்
கண்டவிடமெல்லாங் கள்ளருபத்திரத்தால்
உழவுநடவுமில்லை உபத்திரந்தன்னாலே
கொல்லரிமுடிப்புக் கொடுக்கப்பயமாச்சு
இப்படியாகக்கள்ள ரிடக்குகள்செய்கிறுர்கள்
என்றுசொல்லிநாய்க்க ரெழுதிவிட்டாருத்தரத்தை
விஜயரங்கசொக்கலிங்க வேந்தனுந்தான்கேட்டு
சபையிலுள்ளபேரையெல்லாந் தானும்முகம்பார்த்து
ஆர்பேர்வீரரென்றே யடைவுடனேகேட்டதற்கு
இராசன்முகம்நோக்கி நன்ருயெடுத்துரைப்பார்
அப்படிக்கொத்தகள்ள ரஞ்சாதநாட்டாரை
வெட்டிக்கருவறுத்து விருதுபெற்றுவாரதற்கு
ஒருவராலாகாது உள்ளபடிசொல்லுகிறேம்
ஆயிரம்பொன்சேர்வை யானதொருவீரையனும்
சேனைகள்கூட்டித் தெற்கேயனுப்பிவைத்தால்
கள்ளர்பத்துநாட்டையெல்லாங் கடுகாகத்த
சீக்கிரமாய்த்தான்வருவான் தெள்ளுமணி

என்றுசொல்லியெல்லோரும் இதமாயுரைக்கலுற்றார்
அந்தநல்லசேதி யடைவுடனேதான்கேட்டு
விஜயரங்கசொக்கலிங்க வேந்தன் துரைராசாவும்
வீரையனைத்தானழைத்து வெகுமதியுந்தான்கொடுத்து
ஐயாயிரம்சேனைகளாம் அடைவுடனேதான்கூட்டி
தந்தார்சிவிகை தான்கொடுத்தார்வீரையற்கு
வெள்ளைக்குடையும் வெண்சாமரமுடனே
பதினெட்டுமேளவாத்யம் பாங்குடனேதான்கொடுத்து
பஞ்சவர்ணடால்விருது பட்டாவுந்தான்கொடுத்து
அடைக்காயும்வெற்றிலையு மன்பாகத்தான்கொடுத்து
போய்வாருமென்றுசொல்லி போற்றிவிடைகொடுத்து
அனுக்ரகம்பெற்றுக்கொண்டு ஆணிமுத்துவீரையனும்
ஏறினார்சிவிகையின்மேல் எண்ணமற்றசேனையுடன்
வெள்ளைக்கொடிபிடிக்க வெண்சாமரம்வீச
பொம்மியாண்மனைக்குப் பொங்கமுடன்வாரார்காண்
கன்னியரும்பார்த்துக் களிப்பெய்துகொண்டாடி
என்றுமடையாத வெக்களிப்புத்தானடந்து
பூரித்துபொம்மியரும் பொங்கமுடன்வீற்றிருந்தாள்
ஆணிமுத்துவீரைனு மாண்மனையில்வந்திருந்தான்
இப்படியாக இருக்கின்றவேளையிலே
விஜயரங்கசொக்கலிங்க வேந்தன் துரைராசனுந்தான்
உக்கிராணந்தான்திறந்து முத்தமனார்வீரையற்கு
சேனைதளத்திற்குச் செல்லுமென்றதிரவியமும்
முத்துக்கடுக்கனொன்றும் மோகனமாலையொன்றும்
சாலுவைகள்ரெண்டு தார்வேந்தன்தானெடுத்து
கொல்லர்கையிலேகொடுத்துக் குணமுள்ளவீரனிடம்
கொடுத்துவரச்சொல்லி கொல்லரையனுப்பிவிட்டார்
[illegible]துவெந்தகொல்லர் கொடுத்தார்காண்வீரையற்கு
[illegible]னுமப்போது வெகுவாய்மனங்குளிர்ந்து
[illegible]ரயனுப்பிவிட்டு குணமுள்ளவீரையனும்

கணக்கரைத்தானழைத்து கடுகெவுரைக்கலுற்ருர்
சேனைதளத்துக்கு சிலவுக்குத்தான்கொடென்ருர்
ஐந்துலட்சம்பொன்னெடுத் தவர்கையிலேகொடுத்து
கணக்கெழுதிவாருமென்று காரணனுமந்நேரம்
சம்பங்கியென்னைகொண்டு தலைமுழுகிமயிராத்தி
செங்கமலக்கையாலே சீக்கிரமாய்த்தான்முடித்து
சிவசிவாவென்றுசொல்லித் திருநீறுதானுமிட்டு
புனுகுசவ்வாது புண்ணியனுமேல்பூசி
கண்டவர்கள்தான்மகிழக் கஸ்தூரிப்பொட்டுமிட்டு
போசனமண்டபத்தே போய்ப்புகுந்தான்வீரையனும்
சாதங்கறிவகையுந் தான்படைத்தாள்பொம்மியரும்
சாப்பிட்டிளைப்பாறி சாசமுத்துவீரையனும்
அடைக்காயும்வெற்றிலையு மன்பாகத்தாமருந்தி
வாருமடிபொம்மி வார்த்தைசொல்லக்கேளுமென்ருர்
மதுரையிற்கள்ளர்வந்து வழியிடக்குப்பண்ணுகிருர்
என்றுசொல்லிநாயக்கரிதமுடனேயழைத்து
போய்வாருமென்று போற்றிவிடைகொடுத்தார்
ஆகையினாலே ஆரணங்கேநீதானும்
பயணமதாகிப் புறப்படுநீபைங்கிளியே
என்றுசொல்லிவீரையனு மெழுந்திருந்தேயந்நேரம்
பொம்மியருங்கூட வொற்றுமையுடன்போகலுற்ருர்
சதுரங்கசேனையுடன் காலாள்களெல்லோரும்
பயணமதாகப் பார்மீதில்முழக்கமிட்டார்
பல்லக்கின்மேலே பைங்கிளியுந்தானேற
ஏறினர்குதிரையின்மேல் எடுத்தார்பெரியகத்தி [ரை
படைக்குநல்லபார்த்தனைப்போற் பார்த்தாரேதென்மது
மதுரைதிசைநோக்கி மங்கம்மாள்சாலைவழி
ஆனையின்மேல்பேரிகை யதிரமுழங்கிவர
குதிரையின்மேல்டங்கா கூடமுழங்கிவர
தம்பட்டம்கொம்பு தவில்முரசுதானறைய

பஞ்சவர்ணடால்விருது பக்கமெல்லாஞ்சூழ்ந்துவர
புண்ணியனார்வீரையற்குப் பூச்சக்ரக்குடை நிழற்ற
இருபுறம்வெண்சாமரமும் இன்பமுடன்வீசிவர
கட்டியங்கூறக் கவிவாணர்பாடிவர
நடந்தான்காண்தென் திசையில் நாலுதிக்குந்தானதிர
சேனைவருகிறதுஞ் செந்தூள்பறக்கிறதும்
காடுமலைகடந்து கரியதொருசோலைவிட்டு
சில்லென்றுங்காடுவிட்டுச் செடிமலையுந்தான்கடந்து
மணப்பார்வழிதனிலே வந்தடித்தார்கூடாரம்
கூடாரந்தானடித்துக் கோட்டைசலாதிவிட்டு
வீரையனும்வந்து விடுதியிற்றங்கியபின்
பொம்மியரும்வீரையனும் பொங்கமுடன்வீற்றிருந்தார்
தேசத்திலுள்ள திரள்மன்னரத்தனையும்
பாளையக்காரர் படைமன்னர்வீரருமாய்
வீரையனைக்காண வெகுமதியுந்தானெடுத்து
வந்துமேகண்டு வணங்கியேதெண்டனிட்டு
ஆறொன்றுசொல்லி அன்பாகத்தான்கேட்டார்
பாளையக்காரரென்று பாங்குடனேசொல்லையிலே
எங்குவந்தீரென்றே யிதமுடனேதான்கேட்க
கள்ளருபத்திரங்கள் கனமாயிருக்குதென்று
அஞ்சாதிருங்களென்று ஆதரவுசொல்லையிலே
பாளையங்களெல்லாம் பசியாயிறங்கினபின்
மணப்பார்சுப்பையனு மங்கபதிணுய்க்கருந்தான்
வீரையனைவந்துகண்டு வேந்தர்களுமப்போது
ஆணிமுத்துவீரையற்கும் ஆனதொருருணுவுக்கும்
அரிசிபருப்புடனே ஆனபதார்த்தங்களுடன்
[illegible]ற்கும்பொம்மியற்கும் விருந்துசமைத்தார்கள்
[illegible]ருவரும்வீரையனும் பொங்கமுடன்தான்புசித்து
[illegible]ளப்பாறித் தாம்பூலந்தாமருந்தி
[illegible]ாரிருவருமாய்ப்பாங்கானமெத்தையிலே

கங்குல்விடிந்தபின்பு கதிரோனும்வந்துதித்தான்
பயணமென்றுசொல்லி பாளசின்னமூதலுற்றார்
தென்றிசையைநோக்கிச் சீக்கிரமாய்வருகையிலே
வேகமாய்வருகிறது வீரையன்சேனையென்று
தோராதலத்தையனுந் தும்பிக்கைப்பூச்சியனும்
இரண்டு துரைமாரு மேற்றமுள்ளராணுவுடன்
மராம்பூண்டசாலையிலே வந்துயெதிரே நின்று
கைகுவித்துத்தெண்டனிட்டுக் கட்டளைக்காயிருந்தார்
வீரையனுமப்போ விரைவாகத்தானழைத்து
எங்கேயிறங்கலாமென்றுசொல்லித்தான்கேட்டார்
அடியேங்கள் நாங்க ளறிந்தமட்டும்சொல்லுகிறோம்
துவரங்குரிச்சிக்குத் துருசாகப்போய்சேர்ந்தால்
தண்ணீர்சவுக்கியமுஞ் சாலைநல்லதோப்புகளும்
பேட்டைநல்லசாவடியும் பெரியகடைத்தெருவும்
ஊருக்குமேற்கே யுயர்ந்தகிராமமுண்டு
பாளையந்தானிறங்கப் பதிவானயிடமுமுண்டு
என்றுசொல்லியப்போது ஏற்றமுடன்தானுரைத்தார்
நல்லதென்றுசொல்லி நடந்தான்காண்வீரையனும்
பாளயப்பட்டார் பாதைகொண்டுகோட்டலுற்றார்
சேனைப்படைத்தளமுந் தீர்க்கமுள்ளவீரையனும்
துவரங்குருச்சிக்குத் துருசாகப்போய்சேர்ந்தார்
ஊருக்குமேற்கே யுயர்ந்திருக்குமேட்டின்மேல்
அனுமந்தகூடாரம் அடைவாகத்தானடித்தார்
கோட்டைகளதுவிட்டுக்கொள்ளைகொண்டவீரையனும்
விடுதியில்தானுமப்போ வீற்றிருந்தான்தென்மதுரை
அந்தநல்லவேளையிலே ஆனதொருலக்கையனும்
தும்பிக்கைபூச்சியனுந் துரிதமுடன்வீரையற்கு
விதவிதமாய்வுலுப்பைகள் விபரமாயனுப்பு[illegible]
நெய்க்குடமுந்தயிர்க்குடமும் நேரானபாற்[illegible]
ஆட்டுக்கிடாக்களு மடைவானபன்றிகளு[illegible]

கோழியுடன்காய்கறியும் கொள்ளைகொண்டவீரையற்கு
அத்தனையுமான்பேரி லன்பாயெடுப்பித்து
எடுத்தங்கேசென் றிவற்றை எதிராகத்தான்வைத்து
லக்கனனுப் பூச்சியனு மிசைவாகக்கைதொழுதார்
கூடவேகைதொழுது குணமுள்ளவீரையனும்
வாருமென் றுசொல்லி வரிசையுடனேயழைத்து
இருவர் துரைமக்களுக்கு மின்பமொடுவீரையனும்
ஆளுக்கோர்சாலுவை அன்பாய்பரிசளிக்க
இனிதாயுபசரித்து இருங்களென் றுவார்த்தைசொல்ல
அகங்குளிர்ந்து துரைமக்க ளமைதியுடனங்கிருந்து
வீரையற்குபொம்மியற்கு மேலானவிருந்துசெய்ய
சம்பானரிசிகொண்டு சமைத்தார்கள்காய்கறிகள்
ஆட்டுக்கறியும் ஆனபலகாரமுடன்
அளவிலாக்கறிவகைக ளதிகசுவையாய்ச் சமைத்தே
அவ்விருவருக்குமன்னம் படைந்தார்களப்போது
உண்டுபசியாறி உட்கார்ந்திளைப்பாறி
தாம்பூலந்தான்தரித்துச் சயனித்தார்பூவணைமேல்
பூச்சையனும்லக்கையனும் பொழுதுவிடியுமட்டும்
கண்ணையிமைகாப்பதுபோற் காத்திருந்தார்கடிதாக
அஞ்பார்வினைபோல அகலவிருட்கூட்டம்
பச்சையிலைமேற் பரிதியனுவ்வந்துதித்தான்
தூக்கமுழித்துத் திடுக்கென்றெழுந்திருந்து
தந்தந்துலக்கித் தடாகத்தில்நீராடிச்
சிவசிவாவென்று திருநீறுகாப்புமிட்டு
வண்டத்துலுக்கரைப்போல் வடிவுள்ளபாகைகட்டி
அங்கினிசரன்தொட்டு அடைவுடனேகச்சைகட்டி
பூ[illegible]னெட்டு ஆயுதமும் பாங்குடனேதான்பிடித்து
[illegible]தாண்பிடிங்கிக் கொள்ளைகொண்டவீரனுமே
[illegible]சி யெடுத்தார்பெரியகுடை
[illegible]பட்டார் பறிவாரந்தன்னோடு

வைதினர்சின்னம் உலகமெல்லாந்தானதிர
வீரன்தன்சேனை வெருவாய்வருகுதுகாண்
நத்தத்துலிங்கையனும் நாழிகையிற்றான்கேட்டு
வீடுமெழுகி வியப்பானகோலமிட்டு
தோரணங்கட்டி சுபலோகந்தானுமிட்டு
வீரனுக்கும்பொம்மியர்க்கும் விடுதியலங்கரித்து
வீதிக்குவீதி விதமாகப்பந்தலிட்டு
படியரிசியாவற்றிற்கும் பாங்குடனேதான்கொடுத்து
அடிபணிந்துவீரனுக்கு அடவுடனேதான்கொடுத்து
கண்டுமனமகிழ்ந்து களிப்பிரியமுண்டாகி
வாவென்றுசொல்லி வாஞ்சையுடன்தானழைத்து
மோகனமாலையொன்றும் முத்துக்கடுக்கனொன்றும்
வெகுமதியாகக்கொடுக்க வீரையனுமப்போது
நத்தத்துவீதியிலே நலமாகப்போயிறங்கி
சந்தோஷப்பட்டுத் தனஞ்செயனும்வீற்றிருந்தான்
நத்தத்துலிங்கையனும் நல்விருந்துதானசெய்தான்
பொல்லாதரித்திரமாம் புவனிரவுபோனவுடன்
நல்லசம்பத்தென்னும் நறுமலருல்வந்துதிக்கும்
மறுநாள்காலையிலே மன்னனெழுந்திருந்து
தந்தசுத்திசெய்து தானணிந்தான்வெண்ணீறு
பாளையத்தைஎச்சரித்தான் படைமூாசுதானதிறந்து
மதுரையைநோக்கி மனமழ்ந்துசெய்கையிலே
சதுரங்கசேனைகளும் சதுராகத்தானடந்து
காடுமலைகடந்து கடியவனங்கடந்து
திருமலைநாய்க்கரிட சீமைதனைத்தொடர்ந்து
வைகைக்கரையோரம் வந்திறங்கியப்போது
அண்டமுகடதிர அடித்தார்கள்கூடாரம்
பொம்மியருந்தானும் பொங்கமுடன்வீற்றிருந்தி
கூடாரம்வந்தபின்பு கோட்டைத்தலையாரி
திருமலைநாயக்கன்முன் திடீரென்றுஓடிவந்

வடக்கேயிருந்து வருகுதையோசேனைத்தளம்
மாற்முன்படையோ மருமன்னர்தன்படையோ
என்றுசொல்லித்தலையாரி வணக்கமாகத்தானின்முன்
திருமலைநாய்க்கரும் சேதிதனைக்கேட்டு
ஆருனாலென்ன ஆகட்டுமென்றுசொல்லி
அறிவைப்பிராமணரை யன்பாகத்தானழைத்து
ஆரென்றுசொல்லி யறிந்துமெள்ளவாருமென்றார்
அப்பேதேவேதியரு மாண்சிங்கவீரனிடம்
போனார்கள்சேதிதனைப் பூராயமாய்த்தெரிந்தார்
வேதியரைத்தானழைக்க வீரனுஞ்சொல்லலுற்றார்
விஜயரங்கசொக்கலிங்க வேந்தனெனையழைத்து
மதுரைக்குட்சென்று வண்டெனுங்கள்ளர்களை
அடக்கிவாவென்று மதித்துயெனையனுப்ப
ஆகையினாலேயிங்கு அடைவுடனேவந்தேனென்றார்
சக்கிரமாயுதத்தைத் திருமலைநாய்க்கன் முன்னே
சொன்னார்களந்நேரம் துரைநாய்க்கன்தான்கேட்டு
வீரனுக்குவேண்டும் விடுதியெல்லாமமைத்து
வாசாபிரதானி வரிசைபெற்றசாம்புவனை
எதிராகப்போய்நின்று யேந்தலெனும்வீரனைத்தான்
அழைத்துடனேவாருமென்று ஆக்யாபித்தேயனுப்ப
சாம்புவனுமப்போது தார்வேந்தன்சொற்கேட்டு
எழுந்திருந்துவாசியின்மேலேறிப்போனானுடனே
குதிரைபரிவாரங் கோடிதளம்பின்றொடர
பதினெட்டுமேளம் பண்பறையடித்துவர
வெள்ளைத்துகில்விசிறி விதமுடனேதானடந்தான்
சேனாதிபதி சேனைதளமும்வருகிறதை
வீரனுமப்போது வெகுவாய்மனமகிழ்ந்து
...தளவுதான் அழகாகவேயேற்றி
...த்தொட்டு மகாவீரன்பொம்மியரும்
...கு இனிதாய்வழிநடக்க

ஆணிமுத்துவீரனுமே யரண்மனையில்வந்திறங்கி
சம்பங்கிஎண்ணெயால் தலைமுழுகிமயிராற்றி
கோதிமயிரைக் குடுமிகட்டச்சிக்கறுத்து
சீரானநெற்றிதனில் திருநீறுதானணிந்து
கெந்தகஸ்தூரி கிரினர்மார்புதனில்
கட்டுவர்க்கந்தானணிந்து காரணனுமப்போது
அறுசுவையோடன்ன மருந்தியிளைப்பாறி
ஏலம்லவங்கமுடன யிளப்வெற்றிலைபாக்கும்
தரித்துவிளையாடி சரசபொம்மியைப்பார்த்து
வாருமடிபெண்ணே ஒரு வார்த்தைசொல்லக்கேளுமடி
கள்ளரைக்கொல்ல கட்டளைகளிட்டாரடி
திருமலைநாய்க்கரது தெரிசனஞ்செய்வதற்கு
போய்வாரேனென்று பொன்பல்லக்கேறிப்போய்
திருமலைநாய்க்கருந்தான் சிறப்பாய்கொலுவிருக்கும்
ஆசாரவாசல்வர அழகாகத்தான்கடந்து
பல்லக்குவிட்டிறங்கிப் பாராளும்வீரனுந்தான்
திருமலைநாய்க்கரைத்தான் சேவித்துநின்றாரே
கூடவேநாய்க்கருந்தான் கும்பிட்டுத்தான்தொழுது
பக்கமிருந்துகொண்டு பண்பாகவார்த்தைசொல்வார்
தன்னரசுநாட்டுத் தனிக்காட்டுக்கள்ளரெல்லாம்
மதுரைகடைத்தெருவைவந்துமெள்ளக்கொள்ளையிட்டு
தாலிமுதல்சேலையெல்லாம் தாங்கள்பரிப்பதற்கு
விசயரங்கசொக்கலிங்க வேந்தன் துரைராசனுக்கு
எழுதிவிட்டவப்படியே யியற்கையுள்ளராசனுக்கு
உம்மையனுப்புதலால் நீர்வந்தீர்மன்னவனே

திருமலைநாயக்கரிடம் மதுரைவீரன் போய்க் காணுதல்.

கள்ளர்தளங்கள் கருவையறுத்துவாரும்
என்றுமேநாய்க்கர்சொல்ல இணங்கியவீர
பாசத்தினத்திலே பட்சமில்லாக்கள்ளரை

வெட்டிக்கருவறுத்து வெற்றிகொண்டுவாரேனென்றார்
நாய்க்சாதுகேட்டு நன்றாய்மனங்குளிர்ந்து
வீரனுக்குத்தக்க வெகுமதிகளைக்கொடுத்து
அடைக்காயும்வெற்றிலையு மன்பாகத்தான்கொடுத்து
அரண்மனைக்குப்போவென் றனுப்பினார்வீரனைத்தான்
அரண்மனையில்வீரனுந்தா ரடைவுடனேதானிருந்தார்
அன்றிரவுநீங்கி யாதித்தன்வந்துதித்தான்
வீரனெழுந்திருந்து விடியற்காலக்கடனை
எல்லாமுடித்து நகரெங்குமுலாத்திவந்து
சாப்பிட்டிளைப்பாறி சாமிதுரைவீரனுந்தான்
சாயங்காலந்திவட்டி தான்போட்டுக்கொண்டுமவன்
சொக்கடருசன்னிதிக்குத் துருசாகத்தானோக்கி
தீபார்த்தன்வேளைக்குத் தினம்போய்வரும்போது
வருகிறநாளையிலே மலைத்திருடர்கள்ளரெல்லாம்
கூட்டமிட்டுவளைதடியைக் கொண்டுபுறப்பட்டு

கள்ளர்மேல் மதுரைவீரன் சண்டைக்குப்போய் கள்ளரைக் கருவறுத்தது.

மதுரைகடைவீதி வந்துநுழைந்துகொண்டு
காசுபணம்நாணயத்தைக் கனக்கவேகொள்ளையிட
பட்டணத்திலுள்ள பரிசனங்களெல்லோரும்
கோவென்றசத்தங் கூச்சலும்தானுமிட
நகரத்தலையாரி நாட்டமுடனேவந்து
வீரனுடனேசொன்னான்வீரனுமப்போது
இணக்கமுள்ளபொம்மியற்கு இதுசேதியைச்சொல்லி
குதிரைமேலேறிக் கூடாரமுந்தரித்து
சேனைதளத்துடனே சிறப்பாகவேசென்று
[illegible]குநல்லவாசலிலே வகையுடனேதானடந்தான்
[illegible]ரவீரனுமே நடந்தான்காணம்மானே
[illegible]வீரன்தான் போர்செய்யக்கோபித்து
[illegible]க்கொண்டு பதட்டமுள்ளகள்ளர்மேல்

பாய்ந்தான்குதித்தான் பதிவிருந் துதானுழைந்து
வீசினன்கள்ளர்களை வீராதிவீரனுந்தான்
முன்வீச்சுக்காயிரம்பேர் முனைவீச்சுக்காயிரம்பேர்
இந்தப்படிக்கே யிறக்கடித்தான்வீரனுந்தான்
தன்னரசுநாட்டுத் தனிக்காட்டுக்கள்ளர்களும்
கொக்கரித்துச்சேனைதளம் கோடிபடைதானும்வந்து
ஈட்டிக்கோலாலே எறிந்தார்கள்வீரையன்மேல்
கண்கள்சிவந்து கடுங்கோபந்தான்பூண்டு
வாகுநல்லசமுதாடு வண்மையுடன்றான்பூண்டு
யானைக்கூட்டத்தில் யாளிவந்துபாய்ந்ததுபோல்
பொல்லாதவீரன்மேற் பூர்த்தியாய்வீசலுற்றான்
கள்ளர்படைக்கெல்லாம் கலங்கியேமெய்மறந்து
மெய்சோர்ந்துவிழுவாரும் விதிவசமேயென்பாரும்
ஆதிசிவனுக் கபயமென்றுவிழுவாரும்
ஈட்டிக்கோல்வைத்தபடி யிறந்துமடிவாரும்
அச்சமற்றநாட்டுக் கழிவுவந்துநேர்ந்ததென்றும்
இன்றுமுடிந்ததுகா ணெங்கள்பலமெல்லாம்
கள்ளரெல்லாம்புலம்பிக் கைசோர்ந்துவிழுந்தார்கள்
இப்படியாக இருக்குமந்தவேளையிலே
கள்ளர்படைசேனையெல்லாங் கருவறுத்தவீரன்றன்னை
தேவரெல்லாங்கண்டு சிறப்புடனேபார்த்திருந்தார்
நாலுதிசைமெச்சவீரன் நற்கொலுவில்தானிருந்து
வெள்ளானைமீதேறி வெற்றிகொண்டுவாரார்காண்
பஞ்சவர்ணடால்விருது பக்கமேசூழ்ந்துவர
நாகசுரமேளம் நாட்டியப்பெண்ணாடிவர
மதுரைதிசைநோக்கி வாரார்காணம்மானே
கள்ளர்பற்றுநாட்டையெலாங் களையாய்ப்பறக்க...டு
சகலசம்பிரமத்துடனே சாமிமுத்துவீரையருட...
வருகிறாரென்று வணக்யுள்ளதூதர்களும்
கச்சித்திருமலைநாய்க்கர் கனத்தகொலுவி...

சேதிதனையெல்லாஞ் செப்பலுற்றான்னோம்
கச்சித்திருமலைநாய்க்கர் காதுகொடுத்துக்கேட்டு
சந்தோஷப்பட்டுத் தாதியரைக்கூப்பிட்டார்
தென்னாட்டுமீனாட்சி செண்பகப்பூநாச்சியரோ
பச்சைநிறத்தாளே பவளக்கொடியாளே
மாசிலாப்பத்தினியாள் வானத்தருந்ததியாள்
இந்தப்படிக்கு மியல்பானதாதியரும்
ஆயிரந்தாதியரை யன்பாகவேயழைத்துவர
வெற்றிகொள்வீரற்கு திருஷ்டிகழித்துவர
ஆலாத்திசோடித்து அடைவுடனே அன்பாக
எதிர்கொண்டுபோவென் றெசமானுடனேதான்
நவரத்தினம்பதித்தநல்ல ஆலாத்திசோடித்து
ஆணிமுத்துவீரனுக்கு ஆலாத்திசுத்தினார்கள்
அந்தமுள்ளவெள்ளைமே லாசைகொண்டுவீரனன்று
இந்தப்பெண்மேல் யெவராசைவைத்தாலும்
கைகால்வாங்குமென்று கட்டளையுமிட்டானும்
ஆனையைவிட்டிறங்கி யரண்மனைக்குள்ளேசென்று
திருமலைநாய்க்கன்றனைச் சிறப்புடனேபோய்க்கண்டார்
அந்தநல்லநாய்க்கனும் அன்புடனேவீரனுக்கு
கைலாகுதான்கொடுத்துக் களிப்புடனேவரவழைத்து
சிங்காதனத்தருகே சிறப்பாயிருக்கவைத்து
அடக்காயம்வெத்திலையு மன்புடனேதான்கொடுத்து
கள்ளர்பற்றுநாட்டையெல்லாம் கருவறுத்துவந்தீரே
உம்மைப்போல்தேசத்தி லொருவரையுங்கண்டதில்லை
இளைப்போடிருக்கின்றீ ரேற்றமுள்ளவீரையனே
காலையிலேவந்து கலந்துவசனிப்போம்
[illegible]ன்றுசொல்லிநாய்க்கர் இசைவாகத்தானனுப்ப
[illegible]தன்றுவீரையனும் நாய்க்கரைத்தான்தொழுது
[illegible]னைவாசல்விட்டு அடைவாகத்தானடந்து
[illegible]லறி ஆணிமுத்துவீரையனும்

பொம்மியாமனைக்குப் பொறுமையுடன்போய்ச்சேர்ந்து
கட்டுவற்கந்தானவிழ்த்துக் காரணனுமன்னேரம்
வெந்நீரினாலே வீரையனும்ஸ்நானஞ்செய்து
கோதிமயிராற்றிக் கோணுமற்சிக்கறுத்து
வாரிமுடித்து வகையுடனேவேட்டிகட்டி
சிவசிவாவென்றுசொல்லித் திருநீறுதானணிந்தான்
உண்டுபசியாறி உத்தமனார்வீரனுந்தான்
அடைக்காயும்வெத்திலையு மன்புடனேதாமருந்தி
பஞ்சணைமெத்தையின்மேற் படுத்துயெழுந்தவுடன்
ஆலாத்திபெண்களிலே ஆனதொருவெள்ளியின்மேல்
தீராதவாசைகொண்டு சீக்கிரமாயெழுந்திருந்து
கட்டுவர்க்கந்தானுடுத்திக் கனகப்பணிபூண்டு
சீவிநல்லகொண்டையிட்டுச் சிங்காரமாய்நடந்து
கோட்டையின்மேலேறிக் குதித்தான்காணம்மானே
வெள்ளையம்மாள்தன்விடுதி வேகமுடநோக்கியவன்
அங்கயற்கணம்மன் அடிபணியும்வெள்ளையம்மாள்
மீனாட்சிசன்னிதிக்கு முன்பாகமாளிகையில்
தூங்குமஞ்சக்கட்டில் துலங்கவலங்கரித்து
பஞ்சணைமெத்தையின்மேற் பைங்கிளிவெள்ளையரும்
நினைவுதெரியாமல் நித்திரைதான்செய்கையிலே
உல்லாசமாக வொழிலழகர்தென்மதுரை
விதிப்பயனையெண்ணுமல்மெல்லியர்மேலாசைகொண்டு
மதிலேறித்தான்கடந்து மண்டபமுந்தான்கடந்து
பத்தினியாள்பள்ளிகொண்ட பாரவிடந்தன்னில்வந்து
இருந்துநினைத்தான் எண்ணமுற்றகாளையவன்
தட்டியெழுப்பினால் தையலெழுந்திருந்து
கூவென்றால்மாதர்களும் கூடிடுவார்மாதரெல்லாம்
என்றுபலவாறு யெண்ணியெண்ணியேக்கமுற்று
முருகர்துணையென்று மூர்க்கமுள்ளவீரனுமே
தோளினதுமீதிருந்த துப்பட்டிகீழ்பரப்பி

மெள்ள அசையாமல் மெல்லியளைத்தூக்கிவைத்து
கட்டியிருக்கி கைலாகுகொண்டுதூக்கி;
மாளிகையும்விட்டு மண்டபத்தைதான்கடந்து
தானிருக்குங்கோட்டையைத் தாண்டிக்குதிக்கையிலே
வேவுகாரர்கள்ளரென்று வீரையனைத்தான்பிடித்து
ஆரென்றுசொல்லி அதட்டியவர்தான்கேட்டார்
பத்தினியைக்கொண்டுவந்த பாவம்பலித்ததென்று
ஏங்கிமுகம்வாடி என்னசொல்லப்போவமென்று
ஒன்றுஞ்சொல்லாமல் ஊமைபோல்தானிருக்க
திருமலைநாயக்கருக்குச் சேதிசொல்லிவாருமென்று
அனுப்பிவைத்தார் தூதுவனை ஆனதொருசேவகனும்
தூதுவருமப்போது துருசாகத்தானோடி
ஆசாரவாசல் நின்று அடைவுடனேசொல்லலுற்றார்
திருமலைநாயக்கர் சேதிதனைக்கண்டு
மதுரையுரைத்தபடி மார்கால்வாங்குமென்றார்
கானகத்திற்கொண்டுபோய் கைகாலைவாங்குமென்றார்
காவலருங்கள்ளனைக் கட்டிக்கொண்டுபோய்வாரும்
கைகாலைவெட்டிவிட்டுக் காவலர்கள்வந்துவிட்டார்
வீரனுந்தன்னுடைய விதிதனைத்தானினைந்தான்
ஆதிசிவன்மாயவர்க்கு அபயமென்றுதான்சொல்லி
எண்ணாதுமெண்ணி இருக்குமந்தவேளையிலே
அப்போதுவெள்ளையம்மாளசந்துநித்திரைதெளிந்து
பார்க்கவேவீரன் பக்குவமாய்நின்றிருக்க
கண்டவுடன்யோசித்து காந்தாரியுஞ்சொல்லுகிறாள்
நானோபதிவிரதை நியாயந்தெரியாமல்
தொட்டுயெனையெடுத்துத் தூக்கியேவந்ததினால்
இனியெனக்குநீபுருஷன் என்பதற்கோஜயமில்லை
...ல்லாதகோவே கூடவேநான்வருவேன்
...க்கம்என் துக்கம் ஒன்றல்லால்வேறில்லை
...பாகி உயிரைவிடுவேன்காண்

என்றுதிடமாக இயம்பினாள்வெள்ளையம்மாள்
இவள்சொல்லும்சொற்கேட்டு இருந்தவர்களப்போது
ஆணிமுத்துவீரனென்று அனைவோருந்தாமறிந்து
உண்மையாயின்ருனென்று உண்மையறியாமல்
கைகாலறுத்துவிட்ட காரணத்துக்கென்னசொய்வோம்
என்றுசொல்லிச்சேவகர்கள் இணங்கிவணங்கலுற்ருர்
காலில்விழுந்துகதறியழுகலுற்ருர்
அழுதசத்தம்தான்கேட்டு ஆரணங்குபொம்மியரும்
ஆரோஎவரோ அறிந்துவருவோமென்று
அன்னம்போலேவந்து அருகினிலேதானின்று
வீரனைத்தான்பார்த்து விம்மிவிம்மித்தானழுது
பாதகாநானிதற்கோ பற்றிவந்தேனுன்பிறகே
கால்கையறுப்புண்டிருக்கக் காணவேவந்தேனுன்
எழுத்தையறியாமல் எண்ணினேனகோடிசிந்தை
ஆண்டவனேயுந்தனுக்கு அசடுவந்தவாரேது
மன்னவனேயுந்தனையும் வழிமறிப்பாருண்டோதான்
என்றுசொல்லிப்பொம்மியரும் எங்கிவிசனமுற்ருள்
புருஷனும்வாய்திறந்துபொம்மிக்குச்சொல்லலுற்ருன்
ஆதிசிவன்பிர்மா அன்புள்ளமாயனுமே
கூட்டியெழுதினதைக் குறைப்பாரோபெண்ணரசே
எழுத்தையழிக்க எவரால்முடியுந்தான்
சூரியகுலத்துதித்தத் தோற்றமுடன்வீற்றிருந்தான்
மாறுபடாவம்மிசத்தில் வந்துபிறந்தேன்காண்
பொம்மியரேயானும் பூமியிலிருப்பதில்லை
மீனுக்ஷிபொற்பதத்தை விருப்பமுடன்சேர்வதன்றி
அரைநொடியும்நானிருக்க அதிகாரமில்லையடி
ஆரணங்குபொம்மி அதுசேதிதான்கேட்டு
மன்னவனேயுன்னைவிட்டு மண்மேலிருப்பதில்லை
கூடவருவேன்காண் கொள்ளைகொண்டராஜா
என்றுசொல்லிப்பொம்மி இரக்கமாய்த்தானட

வைகைநதியில் வனமயிலாள்ஸ்தானம்பண்ணி
கூந்தலுதறியங்கே கோடாலிமுடிதான்போட்டு
கூறையுடுத்திக் கோலப்பணிபூண்டு
சிவசிவாவென்றுசொல்லித் திருநீறுதானுமிட்டு
எலுமிச்சங்காய்கையில் ஏந்தியேதானடந்து
அம்மாமீனாட்சி அடியாளும்வாரேனம்மா
சிவசிவாசொக்கலிங்கர் சீர்பாதங்காணவென்று
பயணம்பயணமென்று பைங்கிளியுந்தானடந்து
வீரனிருக்குமிட மேவியேதான்சேர்ந்தாள்
அந்தவிதமாயிருக்கும் அவ்வேளையில்மிகவும்
வெள்ளையருந்தான்பார்த்துவிதவிதமாய்த்தானினைந்து
என்னொருபெண்ணாலே இடியேறுவீரனுக்கு
சொல்லரியபொல்லாங்கு சுகமாகவந்ததினால்
திருமலைநாயக்கர் சேதிதனைச்சொல்வோமென்று
வாடியமனதுடனே வந்துநின்றுசொல்லவேதான்
திருமலைநாயக்கர் சேதிதனைக்கேட்டு
அருமையுள்ளபிள்ளைக்கு அசடுவந்துநேர்ந்ததென்று
ஆசாரவாசல்வந்து அலறியேதான்புரண்டு
ஆடைகலைய ஆபரணந்தான்புரள
ஓட்டமாய்ஓடிவந்து உத்தமனைத்தான்பார்த்து
அப்பாமகனேயென்று அலறியேதானழுது
வெள்ளையரைமணர வேண்டுமெனவேசொன்னால்
கோதைமயிலைக் கூட்டிவந்துதாரேனே
எந்தனதுபெண்ணை இஷ்டமுடன்கேட்டாலும்
கல்யாணந்தான்முடித்துக் கண்ணாலேபாரேனே
நான்தாண்டாவீரனென்று நலமுடனேசொல்லாமல்
பேசாமலிருந்ததினால் பிழைமோசம்வந்ததுகாண்
...றுசொல்லிநாயக்கர் ஏங்கிமுகம்வாடி
...ன்னதிக்கு விருப்பமுடன்தான்சென்று
...ன்கேட்டு ஒருநொடியில்நான்வருவேன்

என்றுசொல்லியப்போது இசைவுடனேபோனார்கள்
சொக்கர்திருவாலயத்தில் துருசாகப்போய்ப்புகுந்து
மூக்கால்வலம்வந்து மூவிருகால்தெண்டனிட்டு
திரிபுரமெரித்தவர்கள் தேவிபரமேஸ்வரியே
வீரனுக்குவந்த விதிப்பயனைத்திருமம்மா
கைகால்வளர்ந்து கடுகவெழுந்திருக்க
வேண்டுமம்மாதாயே வேதாந்தநாயகியே
என்றுசொல்லிநாயக்கர் ஈஸ்பரியுந்தான்பார்த்து
கால்கையுந்தான்வளரக் கட்டளையுமிட்டாள்காண்
திருமலைநாயக்கருந்தான் திரும்பிவருவதற்குள்
மீனாட்சிகிருபையினால் வீரனுக்குமுன்போல
கால்கையுந்தான்வளர்ந்து கடுகவெழுந்திருந்து
திருமலைநாயக்கர்முன்னே சீக்கிரமாயோடிவந்து
வாருமையாராஜாவே வார்த்தைசொல்லக்கேளுமையா
மாறுபடாவம்சத்தில் வந்துபிறந்தேன்காண்
மாறுபடாமேனியிலே மாறுபடவாச்சுதுகாண்
பூவையாலென்னுயிர்தான் பொன்னுலகம்போகுதையா
அன்றெனக்கு ஆயனெழுத்துப்படியே
வாய்த்ததென்றுவீரன் வன்மையுடன்தானுரைக்க
காதினாற்கேட்டுக் கண்ணீர்விட்டார்நாயக்கரவர்
வாழ்வும்பெருஞ்செல்வ மாயமிதுராஜாவே
நீரின்மேற்குமிழி நிலைமையற்றவாழ்க்கையிது
என்றுயிருந்தாலும் இறப்பது நிச்சயந்தான்
சலித்துநீர்தானழுக தர்மமோராஜாவே
என்றுசொல்லிவீரர் இதமாகத்தேற்றிநின்றார்
பெண்களிருவோரும் பிரியமாய்தீக்குதிக்க
நற்சவுக்கமாக நலமானதீக்குழியை
உண்டுபண்ணிவைக்கநீருத்தாரஞ்செய்யுமென்ன
திருமலைநாய்க்கன் சேதியிதுதெரிந்து
வைகைக்குத்தான்போய் மாந்தோப்புக்குட்

தீக்குழிக்கு ஆன செம்மையுள்ளதாவதனை
கண்டுகுறித்துக் கடுகவேவெட்டிவைத்து
சந்தனக்கட்டைகொண்டு சதுராகத்தான்பரப்பி
தீக்குழியைச்சுற்றி ஜெயமங்களஞ்சொல்லி
வேதியரைத்தானழைத்து விதியாகச்செய்யுமென்றார்
ஆலாத்திசுற்றும்பெண் ணனதொருவெள்ளையரும்
பொன்னனதிருமேனிப் பொம்மியருங்கூடவேதான்
ஏற்றமுள்ளவீரன்முன்னே இருவரையுந்தானழைத்து
அன்னதானஞ்சொர்னதானம் அனபாகச்செய்வித்து
கோதானம்பூதானம் கோதையரால்செய்வித்து
காரிகையே நீங்களிருவர் கைலாயஞ்சேருமென்றார்
காதினால்கேட்டுக் காரிகைகள்தாமுமப்போ
பூரித்துமேனி பொங்கியிருவருந்தான்
பூண்டிருந்த ஆபரணம் பொரிபொரியாய்தான்றெரிக்க
சந்தோஷமாயிருவர் சாமிமுத்துபாதத்தில்
அடைவுடனேதெண்டனிட்டு அன்பாயிருபேரும்
இருபேரும்தெய்வத்தை இதமாகவேதொழுது
சுத்திவந்துதீக்குழியைச் சுத்தமனதுடனே
சந்தோஷமாகவேதான் சாமிமுத்துபாதத்தில்
இருபேருந்தெய்வத்தை இதமாகவேதொழுது
சந்தோஷமாகவேதான் சலியாமலேகுதித்தார்

பொம்மியம்மாளும் வெள்ளையம்மாளும்
தீக்குழியில் விழுதல்.

தேவாதிதேவரெல்லாந் திட்டமுடனேபார்தது
ஆகாயகந்தருவர் அனைவோரும்பூச்சொரிய
தேவதுந்துமிதானுஞ் சீக்கிரமாய்த்தான்முழங்க
...யைவீரனுமே சீக்கிரமாய்த்தான்மூடி
...எல்லாஞ் சதிராகத்தான்மிடித்து
...முந்து வண்மையுடன்தானடத்து

ஸ்நானமதுசெய்தபின்பு தபவாகப்பிராமணர்க்கு
வஸ்திரங்காசுபணம் வண்மையாய்த்தானங்கொடுத்து
பொற்றாமரைக்குளத்தில் பொருமையுடன்போயிறங்கி
கோடாலிமுடியவிழ்த்து குதித்துமேஸ்நானஞ்செய்து
சிவசிவாவென்று திருநீறுதானுமிட்டு
சந்தனம்புனுகு சவ்வாதுடன்கதம்பம்
பூசித்திருமேனியெங்கும் பொங்கமுடன்தாமணிந்து
மிதியடியும்பூண்டு மல்ருத்திராட்சந்தாமணிந்து
என்தாயேமீனாட்சி ஈஸ்வரியேயென்றுசொல்லி
காளைமுத்துவீரனுமே கடுகாகத்தான்வந்து
ஆதிசிவனேயென்று அன்புடனேதான்வந்து
மீனாட்சிசந்நிதிமுன் வீரையனும்வந்துநின்று
மூக்கால்வலம்வந்து மூவிருகால்தெண்டனிட்டு
திருமலைநாயக்கர்தனை திரும்பிமுகம்பார்த்து
வாருமென்றுசொல்லி வண்மையுடனழைத்து
மீனாட்சிபொற்பாதம் விதமுடனேசேர்வதற்கு
உத்தரவுசொல்லுமென்று ஒருவார்த்தைதான்கேட்க
மனதுக்குகந்தபடி மகிழ்ச்சியுடனிருமென்று
போய்வாரேனென்றுசொல்லி கூறியேவீரனுமே
பார்வதியின்கோவில் பதினெட்டாம்படியேபோய்
என்தாயேமீனாட்சி எனக்கென்னபுத்தியென்றார்
மூந்தியபூசை முதற்பூசையுன்னுதுகாண்
கம்பத்தடியில் காத்திருந்துபூசைகொள்வாய்
என்றுசொல்லமீனாட்சி ஏற்றவரங்கொடுத்தாள்
காளைமுத்துவீரனுந்தான் கம்பத்தடியில்வந்து
கன்றறுக்குஞ்சூரிதனைக் கையிலேதான்வாங்கி
பார்வதியேயுந்தன் பாதங்கதியென்று
கடுகியேவீரனும் கழுத்தையறுத்துக்கொண்டான்
வீரன்சிரசுதான் மீனாட்சிபாதம்விழவே
எல்லோருங்கூடி ஆச்சரியப்பட்டார்கள்

வீற்றிருந்தசேனையுடன் திருமலைநாயக்கரையும்
மீனாட்சியம்மனப்போ விடுதிபோய்ச்சேருமென்றாள்
அப்படியேயெல்லோரும் அரண்மனைசேர்ந்தார்கள்
அன்றுமுதல்மூன்றுநாள் ஆணிமுத்துவீரனுக்கு
பூசைநமஸ்காரம் புசிப்புமேதானுமில்லை
பார்த்துமெள்ளவீரனுமே பதறியேகோபங்கொண்டு
இப்படிக்குத்தானிருந்தால் ஏர்க்காதுகலியுகத்தில்
என்று நினைத்து எழுந்திருந்து அன்னேரம்
மீனாட்சிசன்னதிபோய் விசையுடனேதெண்டனிட்டு
என்தாயேமீனாட்சி எனக்குப்புத்திசொன்னபடி
பட்டணத்திலுள்ளோரும் பராமரிப்பதில்லையென்று
அதுபார்த்து நீயிருந்தால் என்வயிறுபசியாதோ
ஆதலால்பட்டணத்தில் அமர்ந்தமனிதர்களை
கொள்ளைகொள்ளயெனக்குக் கூறுவையேயானுக்கால்
காவடியுந்தோளேந்திக் கம்பத்தடிவருவேனம்மா
என்றுதான்சொல்ல ஈஸ்வரியுந்தான்கேட்டு
கம்பத்தடிவீரா காரியத்தைச்சொல்லுகிறேன்
துணிவுகூறும்வீரா துள்ளாதேயிந்நேரம்
திருமலைநாய்க்கர்தம் செம்பொன்பணிமாளிகையில்
உள்ளேநுழைந்து உபாயமொன்றுசொல்வாய் நீ
அவ்விடத்திலுள்ளவரை அதட்டிமிகவிழுந்து
பண்ணிவந்தபூசை பாங்குடனேவாங்குமென்றாள்
என்தாயேமீனாட்சி யிதுபோதுமென்றுசொல்லி
திருமலைநாய்க்கன் செம்பொன்மணிமாளிகையில்
ஆக்கிரமித்துப்போய் அதட்டித்தொடைதட்டி
நஞ்சுதின்றுநஞ்சுறுக்கும் நடுச்சாமவேளையிலே
பட்டணத்திலுள்ள பாரமனிதரெல்லாம்
...டத்துரைவீரன் வருகின்றவழிதனிலே
...ரவரப்பயந்து எல்லோருந்தாமொளிப்பார்
...ரமனையில் மதிலேறவீரனும்போய்

சப்பிரமஞ்சக்கூடத்தில் தனித்துச்சயனஞ்செய்யும்
திருமலைநாய்க்கர்தனைச் செவ்வையாய்த்தான்பார்த்து
தோட்டிபோலுருக்கட்டி சொப்பனஞ்சாதித்தான்
வேர்த்துவிரிவிரித்து விழித்துமெள்ளத்தான்பார்த்து
பதறியெழுந்திருந்து பைங்கிளியைதாலெழுப்பி
காணுதசொப்பனந்தான் கண்டுபயந்தேனடி
என்றுசொல்லக்கேட்டு இயற்கையுள்ளபெண்சாதி
எதுநடந்தாலும் ஈஸ்வரியாள்மீனாட்சி
பொற்பாதந்துணையொழியப் புகலுதற்கேதுமில்லை
மன்னவர்க்குத்தேறுதலை மங்கையருந்தானுரைத்தாள்
சொல்லுகின்றவார்த்தை துரைவீரனகேட்டிருந்து
ஆகட்டுமென் றரண்மனையைவிட்டுமெள்ள
கோட்டைத்தலைவாசல் குதிரைலாயம்புகுந்து
பஞ்சகலியாணி பட்டத்துக்குதிரையையும்
அருத்தாரைநொடியில் ஆங்காரங்கொண்டவன்
மாட்டுமெந்தையிற்புகுந்து மகாபூசைகொண்டான்
உக்கிரமுள்ளசேவகர்கள் ஒருநூறுதலையாரி
படுத்திருக்குஞ்சாவடியில் பாங்குடனேபோய்ப்புகுந்து
சுழற்றிஎறிந்தான்காண் சுற்றுமதிற்கப்பாலே
ஆனைகட்டும்லாயத்திலே அஞ்சாமல்வீரன்போய்
மண்டியிட்டுவீரன் மதயானையைப்பிடித்து
கன்னிகைப்பெண்கள் கண்ணுறங்கும்வேளையிலே
கன்னியர்களருகில்வந்து காவைமுத்துவீரனுந்தான்
செய்தகுலுக்குத் திடுக்கென்றுசத்தமிட
அபயமென்றசத்தம் அண்டமெல்லாந்தானதிர
காரணனுந்தென்மதுரைக் கம்பத்தடியில்வந்தான்
கச்சிதிருமலைநாய்க்கன் காலையிலெழுந்திருந்து
கால்கைகள்சுத்திசெய்து கனத்தபணிபூண்டு
கட்டியங்கள்கூறக் கவரிபணிவீச
நாககுரமேள நாட்டியங்களாடிவர

மந்திரிகள்சேனை மகிழ்மன்னர்கூட்டமுடன்
ஆசாரவாசல்விட்டு அரண்மனையுந்தான்கடந்து
சொக்கநாதசந்நிதிக்கு துருசாகவோடிவந்து
அங்கயற்கண்மீனாட்சி அம்மனிடசந்நிதியில்
மீனாட்சிமுன்பாக வேந்தன்விரைவில்வந்து
மூக்கால்வலம்வந்து மூவிருகால்தெண்டனிட்டு
என்தாயேமீனாட்சி யீஸ்வரியேயிப்போது
காணுதசொர்ப்பனங்கள் கண்டவிதங்களென்ன
அதிசயங்கள்வந்தவகை அடியேனறிவதற்கு
வழியாயுரைக்கவேணும் வாய்மையுள்ளயீஸ்வரியே
பார்வேந்தனப்போது பாதத்தில்தான்விழுந்தான்
வாழ்மதுரைச்சொக்கரும் மதுரைமீனாட்சியரும்
அப்பாமகனே அதிசயங்கள்வந்தவகை
காரணமாய்வந்தவகை கம்பத்தடிவீரன்
பட்டபாடெல்லாம் பாரோர்நினைக்கவில்லை
பொந்திபசிமெத்த பெல்லாதவீரனுக்கு
உண்டானதினாலே ஓடிவந்தானுன்மனைக்கு
வீரன்குறையொழிய வேறொன்றுந்தானுமில்லை
பட்டணமெங்கும் பலதெருவார்பூசைசெய்ய
கம்பத்தடியில்வந்து காணிக்கைதானும்வைத்து
சந்துக்குச்சந்து தனிப்பூசைதானுமிட்டு
இந்தப்படிக்கு இதமுடனேதொழுதால்
வீரன்குறைதீர்ந்து வெகுவாய்மனங்களிப்பான்
என்றுசொல்லிஈஸ்வரியும் இதமுடனேவாக்குரைக்க
திருமலைநாயக்கர் சீக்கிரத்தில்தானெழுந்து
கம்பத்தடியில்வந்து காளைமுத்துவீரனுக்கு
ஐந்நூறுபொன்கொண்டு அபிஷேகம்பண்ணிவைத்து
பழும்கட்டிவைத்து மகாபூசையுங்கொடுத்து
...டைத்து தூபதீபங்கொடுத்து
...க்கரும்பும் இதமானபால்பழமும்

வீதிக்குவீதி வேணபடிபூசித்துவர
சந்துக்குசந்து தனிப்பூசைதானுமிட
எல்லோரறிய எங்கும்பறையறைய
மதுரையிலுள் ளோர்கள் வகையுடனேதானுமப்போ
வீதிக்குவீதி வேணபடிபூசையிட்டார்
வீரனிடத்திற்கு வேந்தனும்வந்தேதொழுது
முப்பழமுமிட்டு மூன்பூசைபோடுகிறேன்
வந்தவினைகளெல்லாம் மாளவேசெய்யுமையா
என்றுசொல்லநாயக்கருமே இதமாகக்கைதொழுதார்
இப்படியாக இருக்குமந்தவேளையிலே
கோட்டைக்குரிக்காரன் குமாரமுத்துநாயக்கன்மேல்
திருவாய்மலர்ந்து செப்பலுற்றானேரம்
என்னை நினைக்காம லிதுவரையிலேயிருந்திர்
பொந்திபசியாரிப் பூரித்தேனிப்போது
என்யெயனைப்போல யீய்ந்தால்விபூதிதனை
வந்தபிணிநோயும் மானிடர்க்குத்திருமப்பா
என்றுதெளிவா யிதமாகத்தான்சொல்லி
முன்னிருந்தசேனையெல்லாம் முழுதுமெழுந்திருக்கச்
செய்துமலையேறிச் சென்றுதேயாவேசம்
திருமலைநாயக்கர் திருநீறுதான்கொண்டு
அரண்மனைக்குச்சென்று ஆரிழைக்குதான்கொடுத்து
ஆண்பிள்ளைபிறந்தால் ஆணிமுத்துவீரனென்று
இடவேணும்பேரென்று இயம்பினர்நாய்க்கருமே
கும்பிட்டுவாங்கி குயில்மொழியாள்தான்றறித்தாள்
மூன்றுமாதஞ்சென்று முருக்கம்பூமேனியரும்
புத்திரனுமுண்டானள் பொற்கொடியுமப்போது
பத்தானமாதத்தில் பாலனையும்பெற்றெடுத்தாள்
பிள்ளைக்குவீரன் பேர்வைத்து அந்நேரம்
ஐந்நூறுவண்டியில் ஆனதொருசக்கரையும்
மதுரையறுகாதம் வாழ்மதுரைமூக்காதம்

ஒன்பதுகாதவழி யூர்தோருஞ்சக்கரைகள்
வீதிக்குவீதி வேணமட்டும்வழங்கிவா
வேதியர்க்கெல்லாம் வெகுவாய்த்தானங்கொடுத்து
சொக்கருடன்மீனாட்சி துலங்குமதிற்கோயில்சென்று
முக்கால்வலம்வந்து மூவிருகால்தெண்டனிட்டு
அறுபதுபொன்னெடுத்து அபிஷேகம்பண்ணிவைத்து
அரண்மனைக்குவந்து அரசன்திருமலைநாய்க்கன்
வீரனுக்குப்பூசை விதமுடனேதான்செய்து
பூதலத்திலுள்ளவர்கள் பூசைகொடுப்பார்கள்
உன்காவலுன்னடிமை யுண்மையுள்ளவீரையனே
தற்காத்துக்கொண்டு தயவாகக்காருமையா
ஐயாவேவீரனே அனைவரையுங்காத்திடுவாய்
அவரவர்கள்பங்கில் அனுதினமும் நீயிருந்து
என்னையுங்காத்து இரட்சிக்கவேணுமையா
என்றுதிருமலைநாய்க்கன் இன்பமுடனேதொழுது
வாழ்மதுரைசொக்கர் மதுரைமீனாட்சியம்மாள்
தங்கள்கிருபையினால் தாரணியோர்வாழ்ந்திருக்க
நாடுதழைக்க நல்லமழைகள்பெய்ய

வாழி.

தேவர்களும்வாழி தேசத்தோர்தான்வாழி
அங்கயற்கண்மீனாட்சி அம்மையுந்தான்வாழி
பாடினோர்வாழி படித்தோருந்தான்வாழி
கேட்டோர்கிளைதழைத்துக் கீர்த்தியுடனேவாழி
மாடுகன்றுமக்கள் மருமக்கள்தான்வாழி
வீரனைப்பூசிக்கும் வேல்வீரர்தான்வாழி
நாவலர்கள்தான்வாழி நல்லோர்மிகவாழி
பூதலத்திலுள்ள புண்ணியர்கள்தான்வாழி
வாழியென்றுசொல்லி வரமளித்தாரீச்சுரனர்

மதுரைவீரசுவாமிகதை முற்றிற்று.

உ

கடவுள்துணை.



மதுரைவீரசுவாமி கதை.

சரித்திர அலங்காரம்.

இம்மதுரைவீரன் அம்மானையைப் படித்தவர்களுங் கேட்டவர்களும் சுக்கிரவாரந்தோறும் விநாயகர், சுப்பிரமணியர், மதுரைவீர சுவாமிகள் மூலமந்திர யந்திர சக்கரத்துடன் பூசைசெய்பவர்களுக்கும், கல்யாணங் கூடிவரும், உத்தியோகம் வரும், வியாதி நீங்கிவிடும், மனோகவலை நீங்கிவிடும், சகலபாக்கியமும் சந்தான சம்பத்தும், அஸ்ட ஐஸ்வரியமும், கனதன வஸ்துவும், தீர்க்காயுசும், புத்திரசம்பத்தும், மாடுகள், கன்றுகள், தழைத்துப் பயிர்களெல்லாம், நீட்சிமையோங்கி யெப்பொழுதும் மறுவில்லாப் பெருமை[...] டாகும். இந்தப்படிக்குக் காசிகாண்டத்தில் வியா[...] சொல்லிய கவிகளிலிருந்ததை இக்கதைக்கு[...] பெயர்த்தருளியது. சுபம்! சுபம்!! சு[...]